www.eelamview.com

விடுதலைப்புலிகள்

குரல் 99 ஆனி—ஆடி 2001 5/—

உள்ளே

* சாள்ஸ்அன்ரனி சிறப்புப் படையணி
* ''தீதும் நன்றும் பிறர் தர வாரா''
* சர்வாதிகார அரசும்–மாணவர் எழுச்சியும்
* தீச்சுவாலை தோற்றுப் போனது எதிலே?
* அரங்கேற்றியது சமாதான முயற்சியையே

# விடுதலைப் போரின் தடை நீக்கிகள்

## கரும்புலிகளுக்கு தலைவர் புகழாரம்

''விடுதலைப்போராட்டத்தின் மிக நெருக்கடியான காலகட்டங்களில் இக்கட்டான சூழ்நிலைகளில் எழுந்த தடைகளைத் தகர்த்து, விடுதலைப்போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தியவர்கள் கரும்புலிகள்'' இவ்வாறு தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் கரும்புலிகளுக்கு புகழாரம் சூட்டியுள்ளார்

கடந்த 5-7-2001 அன்று, கரும்புலிகள் நாள் நிகழ்வில் கலந்து கொண்ட தலைவர் பிரபாகரன் அவர்கள் முதற்கரும்புலியாகி தன்னைத் தற்கொடையாக்கிய கப்டன் - மில்லர் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட பிற்பகல் 7-05 மணிக்கு பொது ஈகச்சுடரை ஏற்றி, கரும்புலிகளின் திருவுருவப் படங்களுக்கு மலர்மாலை அணிவித்து அவர்களுக்கு வீரவணக்கம் செலுத்தி, கரும்புலிகளின் போராட்டப்பங்களிப்பை புகழ்ந்து உரையாற்றினார்.

''இன்று நாம் கொண்டாடுவது துக்கதினம் அல்ல. ஒவ்வொரு தமிழனும் பெருமைப்படவேண்டிய பெருமைக்குரிய நாள். உலகத்திற்கே தமிழர்கள் யார்! என்பதை அறியவைத்த நாள். இவ்வளவு காலமும், தமிழர்கள் - சிங்களவர்களைப் பொறுத்து, கள்ளத் தோணிகள் என்றும், உலகத்தலைவர்களைப் பொறுத்து வெறும் கூலித்தமிழர்கள் என்ற பெயருடனும் வாழ்ந்த நிலை மறைந்து தற்போது தமிழர்கள் என்றால் ஒரு வீரம் மிக்க இனம் என்பதை நினைக்க வைத்த நாள் கரும்புலிகள் நாளாகும்'' என்று தலைவர் பிரபாகரன் அவர்கள் கூறினார்.

இந்தக் கரும்புலிகள் நாள் நிகழ்வில் ஆண், பெண் கரும்புலிகள் பங்குகொண்டிருந்தனர். அவர்கள்மத்தியில் உரையாற்றிய தலைவர் அவர்கள் ''எமது இனத்தின் விடுதலைக்கான தாங்கு தூண்களாக பலமானசக்திகளாகவே கரும்புலிகள் இயங்கி வருகின்றனர்'' என்று கரும்புலிகளின் போராட்டப்பங்கை எடுத்துக் கூறினார்.

மேலும் அங்கே தலைவர் உரையாற்றுகையில் ''இனி வருகின்ற காலத்திலும் எழப்போகின்ற தடைகளைத் தகர்த்து விடுதலையை வென்றெடுக்கின்ற பலம் பொருந்திய போராட்டசக்தியான கரும்புலி அணியாகிய நீங்கள் இலட்சியத்திற்காக எடுத்துக்கொண்ட பணியை நிறைவேற்ற வேண்டும்'' எனத்தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தேவை கருதி, காலத்திற்கு காலம் தலைவர் பிரபாகரன் அவர்கள் புதிய புதிய போருபாயங்களை வரைந்து நடைமுறைப்படுத்தி போராட்டத்தை வளர்த்து வருகின்றார். இத்தகைய போருபாயங்களில் கரும்புலித்தாக்குதல் மிகமுக்கியமானது.

1987ம் ஆண்டு யூலை 5ம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த சிங்களப் படை முகாமமீது முதன் முதலில் கரும்புலித் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது.

முதலாவது கரும்புலி களமிறங்கிய யூலை 5ம் திகதியை கரும்புலி நாளாக தலைவர் அவர்கள் பிரகடனப்படுத்தியிருந்தார்.

கரும்புலி வீரர்களின் அதிஉயர் தியாகத்தை வீரத்தைக் கௌரவிக்கும் ஒரு தினமாகவும், இந்த மறத்தமிழ் வீரர்களின் ஆச்சரிய மூட்டும் ஆன்ம உறுதியை மக்களுக்கு உணர்த்தும் ஒரு நாளாகவும், கரும்புலி நாள் கொண்டாடப்படுகின்றது.

போராட்டத்தை நசுக்கும் திட்டத்துடன், புலிகள் இயக்கத்தின் இராணுவபலத்திற்கு விலங்கிடும் நோக்குடன் தரையிலும் கடலிலும் எதிரியானவன் ஒரு பெரும் சவாலாக எழும்போது கரும்புலிகள் தங்களது வரலாற்றுப் பணியை ஆற்றுகின்றனர்.

குறைந்த உயிரிழப்புகளுடன் பாரிய வெற்றிகளை அடைய வேண்டிய அவசியம் எமது போராட்டத்திற்கு உண்டு.

சிங்கள இனத்துடன் ஒப்பிடும் போது நாம் எண்ணிக்கையில் குறைந்த ஒரு தேசிய இனம். எதிரி இராணுவத்துடன் ஒப்பிடும்போது குறைந்தளவு போராளிகளையும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் போர்க் கருவிகளையும் கொண்டுள்ள ஒரு விடுதலை இயக்கம். எனவே எமது தரப்பில் ஏற்படக் கூடிய உயிரிழப்புக்களை இயன்றளவு குறைத்தும, அதேவேளை எதிரிக்கு பேரழிவை உண்டுபண்ண வேண்டிய தேவை எமது இயக்கத்திற்கு உண்டு. அப்படி நிகழும் போதுதான் நாம் இலக்கை அடைய முடியும்.


கரும்புலித் தாக்குதல் முறை ஈழத்தமிழினத்திற்கு ஏற்பட்டுள்ள இந்த வரலாற்றுத் தேவையை நிறைவேற்றி வைக்கக் கூடியது.

உலகின் எந்த ஆயுதங்களினாலும் வெற்றிகொள்ளப்பட முடியாததுவும், உலகின் எந்தத் தொழில் நுட்பத்தாலும் தடுக்க முடியாததும உலகின் எந்த அரச இயந்திரத்தாலும் அடக்க முடியாததும தான் எங்களது கரும்புலிகளின மனோபலம.

இந்த மனோபலம் ஒரு வீர உணர்வை வெளிப்படுத்தும ஒரு குறியீடு மட்டுமல்ல, எமது சமுதாய எண்ணவோட்டத்தில பிரளயத்தை ஏற்படுத்தி வரும சகதிக்கொண்ட ஒரு பாரிய அரசியல் வடிவமுமாகும்.

தேசபக்தியையும், வீரஉணர்வையும் அடித்தளமாகக் கொண்ட இத்தகைய மனோபலம எமது மக்களது மனங்களை ஆழமாக ஊடுருவும போது எதிரியால எதுவும செய்ய முடியாததுடன சுதந்திரத்துடனும், கௌரவத்துடனும வாழும பலத்தையும நாம பெற்றுக்கொள்ள முடியும.

☆



தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

www.eelamview.com



# அமைதி முயற்சிக்கு ஒரு பின்னடைவு

## புலிகளின் குரல்

தமிழ்-சிங்கள தேசியஇனப்பிரச்சனை தொடர்பாக நடுவு நிலைமையுடன், நேர்மையாக நடந்து கொள்ள முனைபவர்களை தனது எதிரியாகப் பார்ப்பது சிங்கள அரசின் வரலாற்று வழமை.

சிங்கள அரசாங்கத்திற்கும் புலிகள் இயக்கத்திற்குமிடையே இணக்கப்பாடொன்றை ஏற்படுத்தி - சமாதான சூழலை உருவாக்க முயன்ற நோர்வேயின் அரசப்பிரதிநிதி சோல்கெய்ம் அவர்களையும் தனது எதிரியாகக் கணித்த சந்திரிகா அரசாங்கம், அமைதி நடவடிக்கைகளிலிருந்து அவரை தூரவிலக்கி வைத்து விட்டது.

விரைவில் சமாதானம் மலரும் என்ற தமிழ் மக்களின் எதிர்பார்ப்பில் இது மண்ணள்ளிப் போட்டுள்ளது.

சமாதானத்தூதர் சோல்கெயிம் அவர்கள் புறந்தள்ளப்பட்ட செய்தி இலங்கை இனப்பிரச்சனையில் அக்கறை உள்ள நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

புலிகள் இயக்கம் - சிங்கள அரசாங்கம் என போரிடும் இருதரப்பினரதும் சம்மதத்துடன் பேச்சுவார்த்தைக்கான அனுசரணையாளராகப் பணிபுரிந்த சோல்கெயிம் அவர்களை, சந்திரிகா அரசாங்கம் ஒரு தலைப்பட்சமாக முடிவெடுத்து, ஓரங்கட்டியுள்ளது.

புலிகள் இயக்கத்தைக் கலந்தாலோசிக்காமல் சந்திரிகா அரசாங்கம் எடுத்த இந்த முடிவானது இராஜதந்திர நியமங்களை மீறிய ஒரு அடாவடித்தனமான செயலாகும்.

சிங்கள அரசின் பொறுப்புணர்ச்சியற்ற இந்தத் திமிர்த்தனமான செயலுக்கு உடன்பட்டு நோர்வே அரசும் செயற்பட்டிருப்பது துரதிஸ்டவசமானது.

இதே போன்றுதான் சில மாதங்களுக்கு முன்னரும் புரிந்துணர்வு உடன்பாடு என்ற பெயரில நோர்வே அரசு தயாரித்த திட்டவரைவை முதலில் ஏற்றுக்கொண்ட சிங்கள அரசாங்கம், பின்னர், புலிகளுடன் கலந்தாலோசிக்காது, திட்டவரைவின் மூலப்பெயரை மாற்றி தனது மேலாதிக்க மனோபாவத்தை வெளிப்படுத்தியிருந்தது.

இந்தப் பெயர் மாற்றச்சிக்கல் தீர்க்கப்படும் முன்னரே சமாதானப்பேச்சுக்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய அடுத்த சிக்கலை சந்திரிகா அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது.

சமாதான முயற்சிகளில் சந்திரிகா அரசாங்கத்திற்கு ஆர்வம் இல்லை என்று நீண்ட காலமாகவே புலிகள் இயக்கம் கூறிவரும் கருத்தானது, மீண்டுமொருமுறை மெய்ப்பிக்கப்பட்டுள்ளது

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் அரசியல் முயற்சிகளில் புலிகள் இயக்கமும் - சிங்கள அரசும் சமபங்காளிகள் என்ற அரசியல் யதார்த்தத்தை ஏற்றுச் செயற்பட சந்திரிகா அரசாங்கம் தயாராக இல்லை.

இவ்விதமான சிங்கள மேலாதிக்கவாத மனப்பாங்கே தமிழரின் தேசிய இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணப் பெருந்தடையாக உள்ளது.

இந்த மேலாதிக்க மனப்பாங்கை அகற்றி - பேச்சுவார்த்தை மேசையில் புலிகள் இயக்கத்திற்கு சமஅந்தஸ்து வழங்கப்படவேண்டும் என்ற நிலையை உருவாக்கும் எண்ணத்துடனேயே புலிகள் மீதான தடையை அரசு நீக்க வேண்டும் என்று புலிகள் இயக்கம் கோரி வருகின்றது.

புலிகளின் இந்த நிலைப்பாட்டை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளவே செய்கின்றது. சமாதானத்தை உருவாக்க புலிகள் இயக்கம் எடுத்து வரும் ஆக்கபூர்வமான முன் முயற்சிகளையும் சர்வதேச சமூகம் பாராட்டுகின்றது.

புலிகள் இயக்கம் தொடர்பான இத்தகைய சர்வதேச கருத்து நிலை மாற்றத்தைக் காவிச்செல்லும் வாகனமாக சோல்கெயிமை, பேரினவாதம் எண்ணுகிறது.

எனவே தான் அனுசரணையாளர் - சமாதானத்தூதர் என்ற பணியிலிருந்து சோல்கெயிமைக் கழற்றி விட்டு பேரினவாதத்தின் அரசியல் அபிலாசைகளைப் பேண சிங்கள அரசாங்கம் முடிவெடுத்துள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சனை சர்வதேச மயப்படுவதை சிங்களப் பேரினவாதிகள் விரும்பவில்லை. அது தமிழர்களுக்குச் சாதகமாக அமைந்துவிடும் என அவர்கள் அஞ்சுகின்றனர்; அவர்களது விருப்பத்தையும் மீறி அது சர்வதேச மயப்பட முனையும் போதெல்லாம் சூழ்ச்சிகர அரசியல் நிலவரங்களைக் குழப்பியடித்து சமாதான சூழலுக்கான வாய்ப்புக்களை மேலும் - மேலும் சிக்கலாக்குகின்றனர்.

சோல்கெயிம் ஓரங்கட்டப்பட்டதும் அமைதி முயற்சியும் தேக்கநிலையை அடைந்து விட்டது. அமைதி முயற்சியை குழப்பும் வகையில் சோல்கெய்ம் பக்கசார்பாகவோ அல்லது பொறுப்புணர்ச்சியற்ற வகையிலோ செயற்படவில்லை.

உறுதியுடனும், நம்பிக்கையுடனும் சோல்கெய்ம் எடுத்த அமைதி முயற்சி பலத்த அடிவாங்கி - முடங்கியுள்ளது என்பது மட்டும் உண்மை.

இந்தத்தேக்க நிலைக்கு - பின்னடைவுக்கு புலிகள் இயக்கம் எந்த வகையிலும் பொறுப்பாகாது. அனாவசியமாக ஏற்படுத்தப்பட்ட இந்த தேவையற்ற குழப்பத்திற்கு சிங்கள அரசே பொறுப்பாகும்.

திட்டமிட்ட வகையில் அமைதி முயற்சிக்கு குந்தகம் விளைவித்துவரும் சிங்கள அரசின சதிச்செயல்களை உலக சமுதாயம் குறிப்பாக நோர்வே அரசு புரிந்துகொள்ளவேண்டும்.

O



''வெரித்தாஸ்'' வெள்ளிவிழா நிகழ்விற்கு தமிழீழ தேசியத் தலைவர்

மேதகு வே. பிரபாகரன் அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி

## 'வெரித்தாஸ் தமிழ்ப்பணி'

### அடிபணிந்து போகாமல் நீதியின் பக்கம் நிற்கிறது

அரசியல் இலாபத்தையும் வர்த்தக நலனையும் பிரதான இலக்காகக்கொண்டே இன்றைய உலகின் செய்தியூடகத்துறை செயற்பட்டு வருகிறது. இவை மக்களின் சேவையை மையமாகக்கொண்டவை அல்ல; மக்களின் தேவைகளைப் பெருக்கி, நுகர்விற்கு ஊக்கமளித்து, வர்த்தகத்தை விரிவாக்கம் செய்வதையே நோக்காகக் கொண்டவை. மக்களின் கருத்துக்களைக் கட்டுப்படுத்தி, அவர்களது சிந்தனையைப் பழுதாக்கி அவர்களது மனவுலகை வளைத்து விடுகின்றன. தாம் விரும்பும் திசையில், அந்த நாசகாரப் பாதையில மக்களை வழிநடத்திச்செல்வது தான் இன்றைய செய்தி ஊடகங்களின் முக்கிய குறிக்கோளாக இருக்கிறது.

இப்படியான விபரீத உலகில், அரசியல் வர்த்தக அபிலாசைகளுக்கு அப்பால் நின்று நடுநிலை, நேர்மை பக்கசார்பின்மை ஆகிய அபூர்வ பண்புகளை வரித்து, அடக்கியொடுக்கப்படும் மக்களின் விடிவிற்காக ஒரு ஊடகத்துறை செயற்பட்டுவருவது பாராட்டத்தக்கது. அந்த வானொலிதான வெரித்தாஸ் தமிழ்ப் பணி.

சிங்கள அரசின் பொய்யான பரப்புரைகளுக்கு மத்தியிலும், உண்மைக்கும் நேர்மைக்கும் மதிப்பளித்து, உள்ளதை உள்ளபடியே உரைக்கின்ற செய்தித்தர்மத்தைக் காத்துச் செயற்படும் தமிழ்ப்பணியின் சேவை போற்றற்குரியது. தேசப்பற்றும் இனப்பற்றும் உறுத்த, கடல் கடந்து அந்நிய தேசங்களில் வாழும் எமது மக்களுக்கும், தினமும் சாவோடு போராடி வாழும் தமிழீழ மக்களுக்கும், எமது தேசத்தின் உண்மை நிலையையும் யதார்த்த சூழலையும் உடனுக்குடன் வெரித்தாஸ் வானொலி அறிவித்து வருகிறது. அத்தோடு, போரினால் உறவுகளைப் பிரிந்து தொடர்புகளை இழந்து, தாயகத்துடன் வேர் அறுத்த மக்களாக சிதறுண்டு வாழும் எம் மக்களுக்கு ஒரு உறவுப்பாலமாக நிற்கிறது வெரித்தாஸ் - வானொலி. இம் மனிதப் பணியானது, இவ்வுலகில் தாம் தனித்து நிற்கவில்லை என்ற உணர்வை எம்மக்களுக்கு ஏற்படுத்துகிறது. அத்தோடு ஒரு அபாரமான தெம்பையும் திடத்தையும் எம் மக்களுக்குக்கொடுக்கிறது.

எந்த சக்தியிடமும் அடிபணிந்து போகாமல், உண்மையின் பக்கமும் நீதியின் பக்கமும் நின்றவாறு, அடக்கியொடுக்கப்படும் மக்களின் குரலாக வெரித்தாஸ் தமிழ்ப்பணி ஒலிக்க எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். வெரித்தாஸ் வானொலியின் அபார வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அயராது உழைத்து வரும், தமிழ்ப்பணிப்பொறுப்பாளர் அருட் திரு. ஜெகத் கஸ்பார் அடிகளாருக்கும் அவருக்கு உறுதுணையாகச் செயற்படும் தமிழ்ப்பணிக் கலைஞர்களுக்கும் தமிழ்ப்பணி சீரும் சிறப்பும் பெற அனைத்து வகையான உதவிகளையும் ஒத்தாசைகளையும் வழங்கிவரும் அதிவணக்கத்துக்குரிய பேராயர் ஆர்ச்ராககியசாமி அவர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருபத்தைந்து ஆண்டுகளாக உலகத் தமிழர்களோடு உறவாடித் தமிழ் நெஞ்சங்களில் இணைந்து விட்ட வெரித்தாஸ் தமிழ்ப்பணி, தனது பணியைத் தொடர்ந்தும் சிறப்புடன் ஆற்ற வாழ்த்துவதோடு வெள்ளிவிழாக்காணும் தமிழ்ப்பணியின மகிழ்வில் தானும் கலந்து கொள்கிறேன்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

வே. பிரபாகரன்
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.



www.eelamview.com

www.eelamview.com



"தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனது முதலாவது சிறப்புப்படையணி ஒன்றைபெற்றெடுத்துள்ளது, இதற்குசாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி எனப் பெயர் சூட்டியுள்ளது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இப்படையணியின் பிறப்பு எம் விடுதலை இராணுவத்தின் உயர்ந்த வளர்ச்சிஒன்றைச்சுட்டிக் காட்டி நிற்கிறது.

இது தமிழீழ போராட்ட வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய சரித்திர நிகழ்ச்சியாகும்.

பயிற்சி, தந்திரம், துணிவு-வெற்றி என்ற தலைவர் பிரபாகரனது வார்த்தைகளைத்தாரக மந்திரமாக இப்படையணி கொண்டுள்ளது.

இச்சிறப்புப் படையணியின் பிறப்பை உலகிற்குப் பிரகடனப்படுத்துவதுடன் அன்பிற்குரிய எமது மக்களுக்கும் தெரியபபடுத்துவதில் மகிழ்ச்சியடைகிறோம். என கடந்த பத்து ஆண்டுகளின் முன் விடுதலைப் புலிகள் பத்திரிகையில் வந்த அறிமுகத்திற்குரியவர்களின் போரியல் வளர்ச்சிகள் இன்றுஎங்கள் எல்லோரது வியப்புக்கும், கவனத்திறகும்உரியனவாகின்றன.

தமிழீழவிடுதலைப்போர்ப்படையின் செயல்திறன் மிக்கதொரு மரபுப் படையணியாக இன்று உயர்ந்து நிற்கும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி, தன் நாமத்

யணியின் அப்போதைய சிறப்புத் தளபதி பால்ராஜ் வழிநடத்திய களமுனைகளில் அவருடன் செயற்பட்டு புலிகளின் மரபுபோர் சக்தியை உலகிற்கு நிரூபிகக காரணியாய் இருந்தது.

இரண்டாம் கட்ட ஈழப்போரின் பல போரரங்குகளிலும், குறிப்பாக போன்ற நடவடிக்கைகளுக்கு எதிரான சமர்களிலும், மற்றும் புலிகளினால் பெயர்சூட்டி நடாத்தப்பட்ட 'இதயபூமி' - 01. 'தவளை' போன்ற வெற்றிகரதாக்கியழிப்பு யுத்தங்களிலும் செயற்பட்டு, ஒரு மரபுப் படையணி என்றவகையில்



தமிழீழ விடுதலைப் புலிகளின்
முதல் தாக்குதல் தளபதி
லெப். சீலன்

திர முக்கியத்துவம் பெற்ற சமர்களை, பிரதான சமரணிகளாகச் சென்று நிகழ்த்திக் காட்டியதன் மூலம் இறுக்கமான யுத்த நிலைமைகளை உடைத்தெறியும் படையணி என அனைவராலும் மானசிகமாக நினைக்கப்படுபவர்களாக மாறினார்கள்.

ஓயாத அலைகள் 01 முல்லைத்தள மீட்புச் சமரில் பிரதான முகாமைத் தாக்கியழிப்பதற்கான சமரணியாக தலைவர் அவர்களினால் நம்பிக்கையுடன் களமிறக்கப்பட்ட சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி கடினங்கள் பல நிறைந்த தனது குறியிலக்கை வெற்றி கொண்டு இறுதியில் புலிகள்ன் இன்றைய மரபுப்போர் வளர்ச்சியின் முதுகெலும்பாக திகழும் கனரக ஆட்லெறிகள் இரண்டையும் கைப்பற்றியது. பெருமைமிகு இந்த வரலாறு புலிகள்ன் முதலாவது மரபுப்படையணியினரையே சாரும்.

சிங்களத்தின் ஜயசிக்குறு பாதை பிடிப்புச் சமரின் கனவுகளையெல்லாம் சிதறடித்து, அவர்களை வன்னிக்காடுகள் எங்கும் அலையவிட்ட புலிகளின் புகழ் பூத்த புளியங்குளம் சமர் அரங்கில் பிரதான தாக்குதல் அணியாக இராணுவத்தை எதிர்கொண்டு, ஜயசிக்குறு இராணுவ நடவடிக்

# சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி

திற்குரியவனான லெப். சீலன் (சாள்ஸ் அன்ரனி) அவர்களின் பதினெட்டாம் ஆண்டு நினைவில், வெற்றிகள் நிரம்பிய தன் பத்தாண்டுப் போர் வாழ்வைப் பூர்த்திசெய்து, அவன் தடங்களைத் தொடர்கின்றது.

படையணி தொடங்கப்பட்ட சில மாதங்களிலேயே அதற்கான முதலாவது போர் பிரவேசம் கிடைத்தது. 1991 இல் பெரும் ஏற்பாடுகளுடன் வன்னியை ஆக்கிரமிக்கும் நோக்கில் முன்னேறிய 'வன்னிவிக்கிரம' படைகளை எதிர்கொண்டு தனது முதற் சமர்க்களத்தை ஆரம்பித்து வைத்தது சாள்ஸ்அன்ரனி சிறப்புப் படையணி.

மரபுப்படையணிக்குரிய போர் அம்சங்களுடன் களமிறங்கி, முன்னேறிய இராணுவத்தை எதிர்கொண்டு தாக்கியழித்து, பின்வாங்கி ஓட வைத்தது மாத்திரமின்றி, விமான எதிர்ப்பு பீரங்கிகள் கைவசம் அற்ற அன்றைய சூழலில் தனது கனரக ஆயுத அணியினரின் அசாத்திய மான திறமைமூலம், உலங்கு வானூர்தி ஒன்றையும் சுட்டு வீழ்த்தி தனது முதற்களத்தை தலைவரின் பாராட்டுக்குரிய சாதனைகள் மூலம் வெற்றி கொண்டது சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி.

அதன்பின் புலிகளின் மரபு இராணுவ வலுவை உலகிற்கு எடுத்துரைத்த ''ஆகாய கடல் வெளிச் சமர்'' நடவடிக்கைகளில் பிரதான பங்கெடுத்தது. அச்சமரில் படை




சாள்ஸ் அன்ரனி சிறப்பு ப்படையணி
போராளிகளின் சிறப்புப் பயிற்சி

தமிழர் தாயகத்தின் இதய பூமியான மணலாறு பகுதிகளை எதிரி ஆக்கிரமிக்க மேற்கொண்ட ஒப்ரேசன், ''மின்னல், ஒப்ரேசன் 'கஜபகு'

அன்புமாறன்

அனைத்து இராணுவ நெருக்கடிகளையும் முன் நின்று எதிர்கொண்டு இரண்டாம் கட்ட ஈழப்போரின் சாதனையாளர்களாக, தாங்கு சக்தியாகத்திகழ்ந்தவர்கள் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியினர்.

இதேவேளை விரிவடைந்த 1994ம் ஆண்டின்பின்னான மூன்றாம் கட்ட ஈழப்போரில் பல சரித்

கையின் நீட்சியால் நெருக்கடிக்குள் சிக்கியிருந்த வன்னித்தளத்தின் இறுக்கத்தை உடைத்தெறிந்த கிளிநொச்சி தளம் மீதான ஓயாத அலைகள் - 02 சமரிலும் முகாமை வீழ்த்தி வெற்றிகொள்ள காரணியாய் இருந்த கடினம் நிறைந்த முன்னணிப் பிரதேசங்களைக் கைப்பற்றி சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு ஆற்றிய காத்திரமான சமர் பங்களிப்புக்கள்மறக்க முடியாதவை.

ஓயாத அலைகள் - 3 தொடர் நடவடிக்கையில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி முன்சென்று சாதனைகள் படைத்த களங்கள் பல. ஆனையிறவு இராணுவ தளத்தில் பாதுகாப்பு கவசங்களாக இருந்த பரந்தன் - உமையாள்புரம் பிரிகேட் தளங்கள் மீதான தாக்குதல் இவற்றில் குறிப்பிடப்பட வேண்டியவை. ஆனையிறவு மீட்பிற்கான புலிகளின் வியூகங்கள் தயார்ப்படுத்தப்பட்ட நிலையில், படையினர் பரந்தன் - உமையாள்புரம் தளங்கள் மீதான புலிகளின் பாய்ச்சலை எதிர் பார்த்திருந்தனர். அதேவேளையில் வேகமானதொரு திட்டமிடலை நிறைவு செய்யும் முகமாக, புலிகளின் போர் வரலாற்றிலேயே முதன் முதலில் ஒரு பகற்பொழுதுச் சமரை பரந்தன் -உமையாள்புரம் இராணுவ தளங்கள் நோக்கி ஆரம்பித்தன புலிகளின் படையணிகள். அந்தச் சமரின் பிரதான அணியாக தளத்தினுள் ஊடுருவி, சாதகமற்ற களச்சூழலில் சமராடி தளத்தை வீழத்திய பெருமை சாள்ஸ அன்ரனி படையணியைச் சாரும்.

பின்னர் ஆனையிறவு மீட்பிற்கான இறுதி முற்றுகைக்காக குடா

(10 பக்கம் பார்க்க)



www.eelamview.com

www.eelamview.com



# "தீதும் நன்றும் பிறர் தர வாரா"

ஏலவே இப்பத்தியில் அண்மைக் காலமாக சொல்லப்பட்ட யாவற்றினையும் தொகுத்தும் பகுத்தும் சொல்வதற்கே இப்பத்தி இம்முறை பயன்படப் போகின்றது.

'தன்னையறிந்திடும் தத்துவஞானிகள் முன்னைய *வினையின் முடிச்சையவிழ்ப்பார்கள்*' என திருமூலர் பாடிவைத்ததற்கு வேறு நோக்கமிருந்தாலும் எமக்கும் ஒரு வகையில் பொருந்துகின்றது. தொடர்ந்தும் எங்களைப் பிடித்து நிற்கும் *வினைகளின் முடிச்சினை* நாங்களும் அவிழ்க்கவேண்டும். அப்போதுதான் எமக்கும் விடுதலை கிடைக்கும். இல்லையேல் மயக்கமும், கலக்கமும் குழப்பத்தினை உருவாக்கும். இவைதான் அந்த மூன்று வினைகள். எப்பொழுதும் எதையும் முதலிருந்தே சொல்ல வேண்டியிருக்கும் அவலம், சமகாலத்தில் கிட்டிய அபூர்வமான வரலாற்று வாய்ப்புக்களை அறியாதிருத்தல், யானை தன்பலம் அறியாதது போல தன்பலம் அறியாமல் நாமிருந்தால் அன்பிற்குரியவர்களே! இதன் காரணத்தாலே இரு முரண்பட்ட நிலைகளுள் இன்று நாம் வாழ்கின்றோம் ''தீதும் நன்றும் பிறர் தர வாரா'' என்பதை உணராதிருக்கின்றோம்.

ஒரு பக்கம் பாருங்கள் மீண்டுமொரு தேக்க நிலை; எவரும் அப்போரில் வெல்ல முடியாத சூழ்நிலை முடிச்சவிழ்க்க முடியாத அரசியல் புதிர், ஒரு பக்கத்திலும் ஆளணிப் பற்றாக்குறை. எனவே தொடரும் இந் நிலை; சர்வதேச அழுத்தம், அதனால் வரும் குழப்பம் என கதைகள் அடிபடத்தொடங்கிவிட்டன. எனவே எம்மவர்களும் கேட்கிறார்கள். பேச்சுக்கள் நடக்குமா? நடக்காதா? போர் தொடருமா? தொடராதா? அரசாங்கம் கவிழுமா? கவிழாதா? உலகம் உண்மையை உணருமா? உணராதா? எமக்கு விடியுமா? விடியாதா? கேள்விகள். கேள்விகள் விடைகளை எதிர்பார்த்து காத்து நிற்கின்றனர் எம்மவர்.

இன்னொரு பக்கத்திலோ எதிரி தரப்பு நிலைபற்றி வரும் தகவல்களைப் பாருங்கள். சிங்கள பேரினவாதத்தினை சாந்தப்படுத்தி ''சரணாகதி அரசியல்'' நடத்தி தாங்கள் 'நல்ல பிள்ளைகள்' என அதே பேரினவாதிகளால் பட்டம் பெறுவதில் மகிழ்ந்த முஸ்லிம் மக்களின் தலைமை பேரினவாத கொடுங்கரங்கள் தம்மீது பாய்வது கண்டு அதிர்ந்து போயுள்ளார்கள். தாம் நடத்திய கேடான அரசியல் தமக்கு விளைவித்திருக்கும் கேடுகள் பற்றி தமது பிரதான எதிரி யார் என்பதை இனம் காண்பதில தாமிழைத்த தவறுகள் பற்றி விரைவில பூரணமாகவே அவர்கள் உணர்வார்கள். அன்று தந்தை செல்வா மலையக மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்ட பொழுது ''இன்று உங்களுக்கு நாளை எங்களுக்கு'' என்றுரைத்தார். நேற்று இன்றும் எங்களுக்கானது. இனி நாளை யாருக்கு? முஸ்லிம் தலைமை பெறப்போகும் மிகக் கசப்பான அனுபவங்கள் தாம் யாருடன் தோழமை கொள்ளல் வேண்டும் என்பதை உணர்த்தும்.

இழி நடத்தையுள்ள பிரதம நீதியரசரைக் கொண்ட சிறிலங்காவின் நீதி எத்தகையது? அவருக்கெதிராக கொண்டுவரப்பட்டுள்ள ஒழுக்கவழுவுரை பிரேரணை விடயத்தில் அமைச்சர்களுக்குள்ளே பிளவுகள் நிலவுகின்றன. இது முதற்கண்டம். அடுத்த கண்டம் அரசாங்கத்தின் மீதான அவன் நம்பிக்கைப் பிரேரணை உறுதியற்ற தள்ளாட்டம் போடும் இன்றா நாளையா என்கின்ற நிலையில் சிங்கள அரசு புலிகள் மீதான தடையை நீக்குவதா இல்லையா? இது அடுத்த கண்டம் இவ்வாறாக பிறருக்கு பொறிகள் வைத்து அரசியல் பிழைப்பு வைத்து நடத்திய அம்மையாருக்கே அவை பொறிகளாகிவிட்டன.

சென்ற யூன் மாதத்தில் (12-6-2001) ஓய்வு பெற்ற லெப். கேணல் ஒருவர் 'ஐலண்ட் நாளேட்டில்' அக்கினிச் சுவாலையின் பின் என்ன? என மனம் நொந்து பின்வருமாறு எழுதினார். தற்போதைய சூழலில் சிங்கள இராணுவத்தின் ஒரு பிரிகேட் என கொள்ளக் கூடிய தொகையான 1800 போர் வீரர் கொல்லப்பட்டதாலோ, செயலிழக்கச் செய்யப்பட்டதாலோ களமுனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு விட்டனர். இதற்கு பின்னும் சற்றும் பொறுப்புணர்ச்சி அற்ற விதத்தில் இராணுவத் தளபதியோ அல்லது நாட்டின் தலைவரோ மௌனமாக இருப்பார்களா? உலகிலே *எந்தவொரு நாட்டிலும் உள்நாட்டுப் போரின் போது இப்படியாக பெருந் தொகையில் இழப்புக்கள் நடந்ததாக வரலாறேயில்லை.* இதன் விளைவுதான் என்ன? இராணுவத்தால் தீர்வை ஒரு போதும் *வெல்லமுடியாது* என்பதை புலிகள் நன்குணர்ந்து விட்டார்கள். இராணுவத் தீர்வு ஒரு போதும் வெற்றி தராது என்பதும் உணர்த்தப்பட்டுவிட்டது. சிங்கள அரசின் நேர்மை குறித்து *புலிகள் எழுப்பியுள்ள சந்தேகம்* சரியானது என்பதும் நிரூபிக்கப்பட்டு விட்டது. ஒரு பக்கத்தில் *அமைதிக்காக இரந்து* கொண்டு மறுபக்கத்தில் இராணுவ நடவடிக்கைகள் மூலம் புலிகளை பணிய வைக்கும் முயற்சி படுதோல்வி கண்டுள்ளது, எனவே அமைதி முயற்சிகள் தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு உள்நாட்டிலும் *சர்வதேச சமூகத்தின் முன்னிலையிலும் ஐயத்திற்குமிடமாகிவிட்டது!* இத்தகையதொரு ஒப்புதல் வாக்கு மூலமிது இன்னும் சில வாக்கு மூலங்களைக் கேளுங்கள்.

அம்மையாருடைய ஒப்புதல் வாக்கு மூலம் அடுத்தது. யூன் 15ம் திகதி சனாதிபதி செயலகத்தில் பிரதி அமைச்சர்களுக்கான இரவுணவு விருந்தின் போது அம்மையார் இத்தனை பெரும் பணச்செலவில் பாதுகாப்பு படையினரை நவீனமயப் படுத்தியும் என்ன பயனைக் கண்டேன் என வாய்விட்டு புலம்பியிருக்கின்றார் (சண்டே ரைம்ஸ் யூன் 24) அடுத்த செய்தியைப் பாருங்கள் சண்டே ஐலண்ட (24 6) தலைப்பே இது தா திறைசேரி நிதி நெருக்கடியில, போர்க் கொடுப்பனவுகள் இடைநிறுத்தம்'' தற்போது தோன்றியுள்ள பாரிய நிதி நெருக்கடி காரணமாக முப்படையினரின் போர்த்தளபாட கொள்வனவிற்கான கொடுப்பனவுகள் உடனடியாக நிறுத்தப்படுகின்றன என முப்படைத் தளபதிகட்கும் அரசாங்கம் அறிவித்து விட்டுள்ளதாம். இடை நிறுத்தத்திற்கான காலவெல்லை எதுவெனவும் சொல்லப்படவில்லையாம். இப்படித்தான் மறு பக்கக் கதை செல்கின்றது,

மேற்குறிப்பிட்ட அனைத்து விளைவுகளும் எதனால் ஏற்பட்டன? *புலிகளின் ஒன்றிணைந்த அரசியல் இராணுவ. இராசதந்திர செயற்பாட்டினாலல்லவா?* எதிரி தரப்பு எத்தகைய குழப்பத்தில் ஆழ்ந்திருக்கின்றது? புலிகளின் இத்தகைய உறுதிமிக்க போராட்ட முன்நகர்விற்கு அடிப்படை நீங்களல்லவா? இதனாலல்லவா மக்கள், மக்கள் மட்டுமே உலக

**- க. வே. பாலகுமாரன் -**

*வரலாற்றை* படைக்கும் உந்து சக்தி என *மாவோ கூறினார்*. உண்மை என்னவென்றால் ''வன்னியில் தொடர் வெற்றிகளை புலிகள் அடையத் தொடங்கிய காலத்திலிருந்தே பிரபாகரன் இரண்டாம் கட்ட கரந்துறை போரின் செம்மை நிலையிலிருந்து மூன்றாம் கட்டத்திற்கு நகர்ந்துவிட்டார். அதாவது (இராணுவ) சமநிலை தனக்கு பாதகமாகாமல் தடுப்பதற்காக தற்காப்பு நிலையிலிருந்தவர். இப்போது (இராணுவ) மூலோபாய ரீதியில் தாக்குதல் தொடுக்கும் நிலைக்குச் சென்றுவிட்டார். எனவே தற்போதைய நிலை ஒரு தனித்த தீர்மானகரமான சமர் என வகைப்படுத்த முடியாது. இது பல காலம் நீடிக்கக்கூடிய இறுதி *வெற்றியை பிரபாகரனுக்கு தரக் கூடிய ஒரு பேரியக்கம்*'' இதை எழுதியவர் புலிகளை வேரோடு அழிக்க வேண்டுமென கூக்குரலிடும் தயான் ஜெயதிலக்கா (ஆனையிறவு) வீழ்ச்சியின் பின்னான அவரது ஒப்புதல் வாக்குமூலமிது.)

ஆகவே எங்கள் அன்பிற்குரியவர்களே! போரியலாளர் கூறும் மாவோ கூறிய இறுதிக் கட்டத்துள் நாம் பிரவேசித்துவிட்டோம்! ஆகவே இக்கட்டத்தில் பேரளவிலான ஆயுதங்களும் மக்களது முழுமையான பங்களிப்பும் முன் நிபந்தனைகள் 'சமர்களில் வெற்றியென்பது வெறுமனே அதிட்டத்தால் வருவதல்ல. போரியல் பற்றிய நுணுக்கமான வருத்தம் தரத்தக்கதுமான ஆழமான கற்றலின் பின் தனக்கென சொந்த இராணுவ வழி முறையை உருவாக்கி அதை செயற்படுத்தலின் மூலமே வெற்றி கிடைக்கும்'' என மாவோவின் போர்க்கலை பற்றி எழுதிய ஆசிரியரொருவர் குறிப்பிடுகின்றார். சே எழுதுகிறார் ''உண்மையான விடுதலையை நேசிப்பவன் அழுத்தமான தீவிர அன்பினால் வழிநடத்தப்படுகின்றான். *அது தலைவனொருவனின் மாபெரும் பாத்திரமாக கூடவிருக்கலாம்.* அவர் *சமரசமில்லாத உறுதியையும் கடின சிந்தையும் ஊசலாட்டமில்லாத வலி தரும் முடிவுகளையும் எடுக்க வேண்டியவராக இருத்தல் வேண்டும்*'' எனவே விடுதலையின் இறுதிக் கட்ட வெற்றிக்கான முன் நிபந்தனைகளில் எதை நாம் நிறைவாக்கிக் கொண்டோம் என்பதை உணருங்கள். எம் தலைவன் வலுவை உணருங்கள்.

எனவே இத்தகைய நிலையில் நாமிருக்கையில் 17/6 தினக்கதிரில் டி. சிவராம் எழுதியது போல *மரபு வழிப் பலம் பெற்று ஒரு அரசின் படைகளை முறியடிக்கும் தறுவாயிலுள்ள* இயக்கமொன்றை அது தன் இறுதிக் குறிக்கோளை அடையாமல் குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு எவ்வாறு தடுக்கலாம். அப்படி தடுப்பதன் மூலம் காலப்போக்கில் எங்ஙனம் அந்த இயக்கத்தினுள் தேக்க நிலையை உருவாக்கி அது நீண்ட காலத்தில் சிதைவடைய வழிவகுத்தல் தொடர்பில் கடந்த 55 ஆண்டுகளுக்கு மேலாக அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா என்பன வளர்த்தெடுத்த எதிர் கெரில்லா போரியல் நுட்பங்களை இங்கும் பிரயோகிக்கின்றனர். ஆனால் வல்லவனுக்கு வல்லவன் உலகில் உண்டல்லவா? என்கின்றார் சிவராம்.

எனவே வல்லவன் யாரென்பது எம்மெல்லோருக்கும் தெரியும். எனவே தற்போதைய தேக்க நிலை திட்டமிட்டு செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ளது என்பதும் இதை முறியடிப்பதற்கான பல முன்நிபந்தனைகளை நாமே நாம் நிறைவேற்றிவிட்டோம் என்பதையும் இப் பத்தி மூலம் உணர்த்தியுள்ளோம்'' இப்போதுள்ள நிலையை எமது பணியைய ஜெனரல் கியாப் தனது மக்கள் போர், மக்கள் சேனை என்கிற விளக்கத்தில் எழுதியவையை மேற்கோள் காட்டுவதன் மூலம் விளக்க முற்படுகின்றோம்'' வியட்னாமின மக்கள் போர் என்பது கடினமானதும் இறுதிவரை நீடிக்க தக்கதாக அமைந்து இறுதி வெற்றிக்கான சூழலை உருவாக்க வேண்டும். *வேகமான வெற்றிபெறவேண்டும என்கிற அவசரத்திலும் பொறுமை யின்மையின் அடிப்படையிலும்*

(11ம் பக்கம் பார்க்க)



www.eelamview.com

www.eelamview.com

# ஓரங்கட்டியது சமாதானமுயற்சியையே

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜக்லண்ட் அவர்கள் சோல்கெயிமுடன் கொழும்பு வந்து சேர்ந்தபோது சமாதான முயற்சிகள் ஆரம்ப கட்ட வெற்றியை அடையப் போகின்றன என்ற நம்பிக்கை பல மடைந்திருந்தது. ஆனால், சமாதான முயற்சியில் இருந்து சொல்கெயிம் அவர்களை ஓரங்கட்டும் இலக்குடனேயே ஜக்லண்ட் கொழும்பு வரவழைக்கப்பட்டார் என்ற செய்தி பரவியதும் சமாதானம் மலரும் என்ற நம்பிக்கையும் நலிவடைந்துவிட்டது.

இனச்சிக்கலுக்கான அமைதி முயற்சியை அமைச்சரவை மட்டத்திற்குத் தரமுயர்த்த இணக்கம் காணப்பட்டுள்ளது என்று இரண்டு நாடுகளினதும் வெளியுறவுத்துறை கூட்டறிக்கை வெளியிட்டு சோல்கெயிம் புறந்தள்ளப்பட்ட தகவல் சூசகமாகத் தெரிவிக்கப்பட்டது.

அனுசரணையாளர் - அமைதித் தூதர் என்று தான் ஏற்ற பணியை திறம்படச் செயலாற்ற முயன்றதே சோல்கெயிம் அவர்களுக்கு எமனாக அமைந்து விட்டது. தொடர்ந்தும் சோல்கெயிம் அவர்கள் இந்தப் பணியை ஆற்றி வந்தால் அது சிங்களப் பேரினவாதத்தின் அரசியல் அபிலாசைகளுக்கு ஆப்பு வைத்து விடும் என்று சந்திரிகா அரசாங்கம் அஞ்சியது.

புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாத அமைப்பு என்றும் - இனப்பிரச்சனைக்கான சமாதானத்தீர்வுக்குத் தடையாக புலிகள் இயக்கம் உள்ளது என்பதும சிங்கள அரசின் நிலைபபாடாக இருந்து வருகின்றது.

ஆனால், சமாதான வழியில் இனப்பிரச்சனைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைததேட புலிகள் இயககம் தயாராகவே உள்ளது என்ற தகவலையும், அதற்காக நோர்வையுடன் உழைக்க புலிகளின் தலைமைப்பீடம் உறுதியாக உள்ளது என்ற உண்மையையும் சோல்கெயிம் உலகிற்குத் தெரியப்படுத்தி வந்தார். இது சிங்கள அரசிறகு சினத்தைஊட்டியது.

புலிகள் இயக்கம் பற்றிய சோல்கெயிம் அவர்களின் கருத்துக்களை மறுதலித்து வாதாட முடியாத சிங்கள அரசாங்கம் அவரை புலிகள் இயக்க அனுதாபி என்றும் - தமிழ் இன ஆதரவாளன் என்றும் முத்திரை குத்தி சமாதானமுயற்சிகளிலிருந்து அவரை ஓரங்கட்ட இராஜதந்திர முயற்சிகளை எடுத்தனர். இறுதியில பேச்சு முயற்சியை தரமுயர்த்தல்' என்ற போர்வையில் சோல்கெய்ம் அவர்களை ஓரங்கட்டுவதில் சிங்கள அரசாங்கம் வெற்றி பெற்றுள்ளது.

சிங்கள அரசாங்கம் எடுத்த இந்தஒரு தரப்பான முடிவை அவசரப்பட்டுஏற்றுக்கொண்ட நோர்வே அரசானது; செயற்திறனுள்ள தனது அமைதித்தூதரை தூரவிலக்கி வைக்கச்சம்மதித்து விட்டது.

புலிகள் இயக்கத்தைக் கலந்தாலோசிக்காது எடுத்த இந்த முடிவு தவறானது என்று நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் கருத்து நிலவுவதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சோல்கெய்ம் ஓரங்கட்டப்பட்டதைத்தொடர்ந்து அமைதி முயற்சியும் தேக்க நிலையை அடைந்துவிட்டது. இந்த நகரா நிலைக்கு புலிகள் இயக்கம் எந்த விதத்திலும் பொறுப்பாகமாட்டாது.

இந்தத் தேக்கநிலையைப் பயன்படுத்தி- தனது இராணுவத்தாக்குதல்களை, விமானக்குண்டு வீச்சுக்களைத் தீவிரப்படுத்தி - சமாதான முயற்சிகளை குழப்ப சிங்கள அரசு முயன்று வருகின்றது.

இலங்கையின் இனப்பிரச்சனையை அமைதிவழியில் தீர்த்து வைக்க விரும்பும் உலகநாடுகள் தமிழ் - சிங்கள இனமுரண்பாட்டின் வரலாற்றை தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

அமைதி வழியில், இனப்பிரச்சனைக்கு, நிரந்தரமான அரசியல் தீர்வுகாண தமிழர் தரப்பு எப்போதும் தயாராகவே இருந்து வருகின்றது. ஆனால், அதற்குத் தயாராக சிங்கள அரசு ஒரு பொழுதும் இருந்ததில்லை.

அமைதி வழியில் அரசியல் தீர்வு காணுமாறு இலங்கை அரசுக்கு சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுக்கும் போதெல்லாம் ஒப்புக்காக சமாதானக்கோசமிடுவதும் - பின்னர் சதிமுயற்சிகள் மூலம் சமாதான சூழலைககெடுப்பதும் சிங்களத்து அரசியல் வழமையாகும்.

நோர்வே அரசின் அனுசரணை முயற்சியுடன் கூடிய சமாதானச் செயற்பாட்டிற்கும், இப்போது. இந்தக் கதியே ஏற்பட்டுள்ளது.

சோல்கெய்ம் அவர்கள் மேற்கொண்டு வந்த தீவிரமான அரசியல் முயற்சிகளை சர்வதேச இராஜதந்திரிகள் பாராட்டவே செய்தனர். சமாதானப்பாதையில் உள்ள தடைகளை மெது மெதுவாக அகற்றி, சிங்கள அரசையும், புலிகள் இயக்கத்தையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வர அவர் எடுத்த காத்திரமான இராஜதந்திரப்பணிகளை, நடுவுநிலையைக்கைக்கொள்ளும் எவருமே ஏற்றுக்கொள்வர்.

தம் மீதான தடையை அகற்றி பேச்சுமேசையில் சமத்துவநிலையை ஏற்படுத்தவேண்டும் என்ற புலிகள் இயக்கத்தின் கோரிக்கையை சோல்கெயிம் அவர்கள் சரியான திசையில் இட்டுச்சென்றார்.

இந்தக் கோரிக்கையின் நியாயத்தன்மையையும், அது நிறைவேற்றப்பட்டால் எழக்கூடிய அமைதிக்கான வாய்ப்புக்களையும் உய்த்துணர்ந்த சோலகெயிம் அவர்கள் புலிகள் மீதான தடையை அகற்றும்படி சிங்கள அரசைத்தூண்டும நோக்குடன் இந்தியா- அமெரிக்கா-இங்கிலாந்து போன்ற நாடுகளின் இராஜதந்திரிகளுடன் கலந்துரையாடல்களை நடாத்தியிருந்தார்.

**"சோல் கெய்ம் ஓரங்கட்டப்பட்டதைத் தொடர்ந்து அமைதி முயற்சியும் தேக்கநிலையை அடைந்து விட்டது. இந்த நகரா நிலைக்கு புலிகள் இயக்கம் எந்த விதத்திலும் பொறுப்பாகமாட்டாது,**

சோல்கெயிமின் இந்த முயற்சிகளை சிங்கள அரசு விரும்பவில்லை. அவரின் முயற்சி வெற்றி பெற்றால் புலிகள் இயக்கத்திற்கு சர்வதேச ரீதியாக ஒரு அரசியல் அங்கீகாரம் கிடைத்துவிடும் என்று அது அஞ்சியது இந்த அங்கீகாரம், பேச்சுவார்த்தை மேசையில் தமிழர் தரப்பினர் பேரம் பேசும் நிலைமையையும் உயர்த்தி விடும் என்றும் எண்ணியது.

இந்த நிலைமை வளரவிடாது முளையிலேயே கிள்ளி எறிய வழி பார்த்தது. அனுசரணையாளரை அகற்றி, புதியவர் ஒருவரை அரங்கேற்றுவதன் மூலம் இதைச்சாதிக்க எண்ணியது. இத்தகையதொரு சூழ்ச்சிகர நோக்குடனேயே அனுசரணையாளர் மாற்றப்படுகின்றார் என உலக சமூகம் கருதாமல் விடுவதற்காக பேச்சு வார்த்தைதரமுயர்த்தப்படுவதாகவும், அந்தத் தரமுயர்த்தலுக்கு ஏதுவாக அனுசரணையாளரும் புதிதாக நியமிக்கப்படுகின்றார் என்றும் காரணம் கூறுகின்றது.

இனப் பிரச்சனையை அமைதி வழியில் தீர்க்க சிங்கள அரசுடன் நேரடியாகப் பேசுவது எந்தப் பயனையும் வழங்காது என்ற உண்மையை அனுபவ வாயிலாகக் கண்டுணர்ந்த பின்பே இனிமேல், மூன்றாந்தரப்பு மத்தியத்துவத்துடன் பேச வேண்டும் - அதுவே பயன்தரும் என்ற முடிவை எடுத்து புலிகள் இயக்கம் அறிவித்திருந்தது. இதன் அடிப்படையிலேயே மூன்றாவது நாடொன்று (நோர்வே) ஆடையாளம் காணப்பட்டு - இருதரப்பாலும் ஏற்கப்பட்டு - சமாதான முயற்சிகள் தொடங்கப்பட்டது. ஆனால் இந்த முயற்சிகளையும் சூழ்ச்சிகர நடவடிக்கைகள் மூலம் குழப்பியடிகக சிங்கள அரசு முனைகின்றது.

சமாதான வழிமுறைகளில் தமிழரின் தேசிய இனச்சிக்கலுக்கு அரசியல் தீர்வுகாணும் எண்ணம் சிங்கள அரசிற்கு இல்லை. போர்மூலம் தமிழரின் இனப்பிரச்சனைக்கு இராணுவததீர்வு காணப்பட வேண்டும். என்றே சிங்கள அரசு விரும்புகின்றது. இராணுவததைப் பலப்படுத்துவதிலும் - நவீனப்படுத்துவதிலுமே அரசவளம் செலவளிக்கப்படுகின்றது. புலிகளின் பிரதேசத்திற்குள் ஊடுருவித் தாக்குதல்களை நடாத்திபோரை விரிவாக்கி - தீவிரப்படுத்துவதிலேயே அரசு கவனமுங் கருத்துமாக உள்ளது.

இந்தநிலையில், புலிகள் இயககம் தொடர்ந்தும்அமைதிப் பாதையில் செல்ல வேண்டும் என்று சர்வதேச சமூகம் எதிர்பார்ப்பது நீதியாகாது.

— எல்லாளன் —



பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட நோர்வே பிரதிநிதிகள்.



www.eelamview.com

www.eelamview.com



# தீச்சுவாலை தோற்றுப்போனது எதில்?

வானமேறி வைகுண்டம் போகப்புறப்பட்டவர்கள். வீழ்ந்து கிடந்தபோது, தாங்கள் கோழி கலைக்கத்தான் கூரை ஏறினோம் என்று சொதப்பல் கதையை அவிட்டு விட்டு ஊடகங்களின் கேலிக்கிடமாகி தம் நிர்வாணத்தை காட்டியதாக தீப்பிழம்பு இராணுவ நடவடிக்கையும், அது பற்றிய அரசின் வியாக்கியானங்களும் அமைந்து போயிற்று.

'அக்கினி கீல' தீப்பிழம்பு என்ற பெயர் கொண்ட நடவடிக்கை இராணுவத்தரப்பால் எத்தகைய விளைவை எதிர் பார்த்து அர்த்தப்படுத்தப்பட்டது என்பதைவிட அது எத்தகைய விளைவை ஏற்படுத்தி அர்த்தப்பட்டிருக்கிறது என்பது தான் முக்கியமாகின்றது.

'அக்கினி கீல' வின் முன்னான காலத்தின் இராணுவ சம நிலையில் புலிகள வலுவான நிலையில் இருந்து கொண்டும், சமாதானத்தில் நம்பிக்கையிழந்து விடாது அவர்கள் காட்டிய நெகிழ்ச்சிப்போக்கு அனைவரது மட்டத்திலும் வரவேற்கப்பட்டதோடல்லாமல் சமாதானத்தின் மீதான நம்பிக்கையை சிறிய ஒளிக்கீற்றாகவேனும் காட்டியது. ஆனால் அரச தரப்பு இது வரை நடந்த போர்வரலாற்றிலேயே மிக மோசமான பின்னடைவையும்" இராணுவ பலத்தின் மோசமான சிதைவையும் அதனாலேற்பட்ட அரசியல் நெருக்கடிகளையுமே கையில் கொண்டிருந்தபோதும், சமாதான முயற்சியில் அரசு காட்டிய நெகிழ்ச்சியற்ற இறுக்கமான போக்கு சமாதானத்தில் ஆர்வம் கொண்டோருக்கு ஒரு இருண்ட வெளியையே காட்டி நின்றது.

ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்தினால் களத்திலேற்படக்கூடிய நெருக்கடிகளுக்கு முகங் கொடுத்தவாறு புலிகள் நான்கு மாதகாலம் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்து தமது நெகிழ்ச்சிப்போக்கை வெளிக்காட்டி காத்திருந்தனர். அரச தரப்போ ஆட்லறிகள், டாங்கிகள், மிக்-27 தாக்குதல் விமானங்கள், போர்ககப்பல்கள், பல குழல் பீரங்கிகள் என மரபுசார் நவீன போராயுதங்களை வாங்கி தமது இராணுவத்தின் சூட்டுப்பலத்தை (Fair Power) உயர்த்துவதில் அக்கறை காட்டியவாறு இருந்தது. படைக்கு ஆள திரட்டல், நடவடிக்கைக்கான கடும் பயிற்சி, ஒத்திகை என படைத்தரப்பு வெளிப்படையாகவே மும்முரம் காட்டியது. 'கிணிகிர' நடவடிக்கை தந்த உற்சாகத்தில் அவர்கள் படு வேகமாக இயங்கிக்கொண்டிருந்தார்கள்.

யாழ்ப்பாணம் புலிகளிடம் வீழ்ந்துவிடப்போகிறது என்ற அச்சத்திலிருந்தவர்களுக்கு, அதனைத் தக்க வைப்பதற்கு உலக நாடுகளின் கால்களிலெல்லாம் போய் விழுந்தவர்களுக்கு யாழ்ப்பாணத்தை மீட்காது புலிகளின் ஓயாத அலைகள்-03 நடவடிக்கை நிறைவடைந்து விட்டமையை தமது இராணுவ வல்லமையுடன் பொருத்திப் பார்க்க முடியவில்லை. புலிகளின் இயலாமையுடனேயே அவர்கள் அதை பொருத்திப்பார்க்கத் தலைப்பட்டனர். அவர்கள் கண்ட களயதார்த்தம் அவ்வாறே அவர்களை நிர்ப்பந்தித்தது.


இதன் விளைவு என்ன? அனைத்துத் தரப்பாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சிறிலங்கா இராணுவத்தின் இயலாமையை கையில் வைத்துக்கொண்டு புலிகளின் போர் நிறுத்தத்தை வரவேற்று பேச்சு வார்த்தையில் ஈடுபடுவதால் ஏற்படக்கூடிய அரசியல் இலாபத்தை விடவும் புலிகளின் 'இயலாமையை' சாதகமாக்கி படைக்குவிப்பையும், படைக்கலன்களின் குவிப்பையும் கையில் கொண்டு யுத்தத்தில் இறங்குவது அதிகளவு அரசியல் இலாபத்தை ஈட்ட வல்லதாக சந்திரிகா அரசாங்கம் எண்ணியது.

ஆக, தமது இயலுமையின் பாற்பட்டு அல்லாமல் புலிகளின் 'இயலாமை' என்ற கணிப்பீட்டின் பாற்பட்டே இந்த நடவடிக்கை முளைத்தது. புலிகள் வெறுங்கையுடன் நிற்கிறார்கள் என்ற மதிப்பீடு தாம் கொள்வனவு செய்த நவீன மரபுசார் போராயுதங்களால் தமது கைகள் தீப்பிழம்பைக் கக்கும் சகதி பெற்று விட்டதாக அரசாங்கத்தை உறுதியாக நம்பத்தூண்டியது. அதன் விளைவே அரசாங்கத்தின் இத்தகைய நகர்வாகும்.

புலிகள் மூன்று தடவை யுத்த நிறுத்தத்தை நீடித்து சமாதானத்திற்கு வாய்ப்பளித்த போதும் அதற்கு பதில் யுத்த நிறுத்தமொன்றை அறிவிக்காத அரசு தென்பகுதியில் யுத்த கோஷத்தையே முழங்கியது. புலிகள் தமது யுத்த நிறுத்தத்தை முடிக்துக் கொள்வதாக அறிவித்ததன் பின், ஆனால் யுத்த நிறுத்தம் நடைமுறையில் இருந்த நாளில், 'அக்கினி கீல' தொடங்குவதற்கு இரு நாட்களின் முன் இராணுவத்தினரின் பதவியுயர்வு வைபவத்தில் கலந்துகொண்ட ஜனாதிபதி ''புலிகள் மீதான இறுதி வெற்றியை நிலை நாட்டும் வரை யுத்தம் தொடரப்படவேண்டும்'' என்றவாறான உணர்ச்சி ததும்பும் உரையொன்றை நிகழ்த்தி நாட்டை ஒரு பரபரப்புக்குள்ளாக்கினார்.

அதே போன்றே "கிணிகிர" நடவடிக்கையின் பின்னான காலப்பகுதியில் வடபிராந்திய கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா பத்திரிகையாளருக்குப் பேட்டியளித்தபோது ''ஆனையிறவு மூலோபாய ரீதியான முக்கியத்துவம் என்பதைவிட அது படையினருக்கு உளவியல் ரீதியான முக்கியத்துவம் வாய்ந்தது'' எனக்கூறினார். அத்துடன் ''ஆனையிறவை மீளக்கைப்பற்றும் எண்ணமுள்ளதா? எனக் கேட்கப்பட்டபோது ''எதிர்கால யுத்த மூலோபாயம் விவாதிக்கப்பட்டு, எதிர்கால யுத்த மூலோபாயத்திற்கு ஆனையிறவை கைப்பற்றுவது அவசியமெனக் கருதப்பட்டால் அதை மீடபதற்கான நடவடிக்கை தொடங்கப்படும். அல்லாதுவிடின் அவ்வாறொரு நடவடிக்கையை தொடங்கவேண்டிய அவசியம் எமக்கில்லை. எவ்வாறாயினும் ஆனையிறவைக் கைப்பற்றும் பலம் இன்று படையினரிடம் உண்டு'' என்று தெரிவித்திருந்தார்.

ஆக ஆனையிறவை நோக்கி செய்யப்பட்ட தீப்பிளம்பு நடவடிக்கை வெறும் இராணுவத்தினர் காயப்பட்டு, இராணுவத்தினர் கொல்லப்பட்டதுமான இழப்போடு அதன் அர்த்தம்



''நிலம் பிடிக்க தேரேறிவருகின்றாய் பகையே — நாங்கள் பலம் கொண்டோம் வா உனக்கு இங்கேதான் அழிவே''



www.eelamview.com

www.eelamview.com



ருங்கிவிடவில்லை. அது சந்திரிகா அரசாங்கம் எதிர்பார்த்த அரசியல் இலாபத்திற்கு எதிர்மாறான ஒரு அரசியல் விளைவை ஏற்படுத்தியதுடன், அரசாங்கத்தின் உட்கட்சிப் பிளவிலிருந்து ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்ளவேண்டியவாறான அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளதுவரை விரிவாக்கம் கண்டுள்ளது.

ரபுத்திரன்

அதுபோன்றே, இராணுவ அர்த்தத்தில் படையினரின்

தன்மையை வெளிக்காட்டிய போதும் அது புலிகளின் பலவீனம் என்ற வாதத்தை முன்வைத்த அரசு அதன் முயற்சியை அலட்சியம் செய்து புலிகளின் யுத்த நிறுத்த முடிவுத் திகதியின் இறுதி மணித்துளிகள் கடந்துவிட்டபோதே தொடங்கப்பட்ட தீப்பிழம்பு நடவடிக்கை புலிகளின் கரங்களிலிருந்த சமாதானப்புறாவை சுட்டெரித்துவிட்டது என்றவகையில் ''சமாதான முயற்சிக்கு ஏற்பட்ட பாரிய பின்னடைவு இது'' என்ற மேற்குலகத்தின் அங்கலாய்ப்பு சந்திரிகா அரசாங்கத்தின் இராஜதந்திரத்திற்கு ஏற்பட்ட தோல்வியுமாகும்.



''விடியலின் கனவு நெஞ்சிலே
விடுதலையின் பாரம் தோளிலே''

உளவியல் ரீதியான பாதிப்பை ஏற்படுத்திய ஆனையிறவு இழப்பு புதிய போராயுதங்களுடன் அது மீளக்கைப்பற்றப்படுவதற்கு எடுத்த முயற்சியடைந்த எதிர்பாராத, பயங்கரமான உயிரிழப்புடனான தோல்வி படையினரின் உளவியல் ரீதியான பாதிப்பை பலமடங்கு கூட்டிவிட்டது. அத்துடன் எதிர்கால மூலோபாயத்திற்கு ஆனையிறவு முக்கியத்துவமானது என்ற வகையிலேயே அதைநோக்கிய படைநகர்வு எடுக்கப்பட்டது என்ற வகையால் இதன் தோல்வி அடுத்து வரும் யுத்தத்திற்கு மூலோபாய ரீதியான தோல்வியாகவும் அமைந்துவிட்டது.

இவற்றையும் கடந்து, புலிகள் பலமானதொரு நிலையில் இருந்துங்கூட நோர்வேயின் சமாதான முயற்சிக்கு தமது நெகிழ்ச்சித்

இவ்வாறு தீப்பிழம்பு அடைந்த தோல்வியின் பரிமாணம் எப்படி விரிந்து செல்கிறதோ அவ்வாறே தீப்பிழம்பை எதிர்கொண்டு புலிகள் அடைந்த வெற்றியின் பரிமாணமும் விரிந்து செல்கிறது.

---

**''படைக்குவிப்பையும் படைக்கலன்களின் குவிப்பையும் கையில் கொண்டு யுத்தத்தில் இறங்குவது அதிகளவு அரசியல் இலாபத்தை ஈட்ட முடியுமென சந்திரிகா அரசாங்கம் எண்ணியது''**

---

ஆனால் எமது மக்களும் சமாதானத்தில் ஆர்வம் கொண்டவர்களும் பெறவேண்டிய ஞானத்தை இந்த தீப்பிழம்பு போதிமரம் தந்திருக்கிறது; என்னவென்றால் தீப்பிழம்பையே தீயிடக்கூடிய தீயை எம்கரங்கள் கொண்டிருக்காவிட்டால் வெண்புறாவையும் எம்கைகளில் வைத்திருப்பதற்கான தகுதியை நாம் இழந்துவிடுவோம் என்பதே. ○

# வழித்தடம்...

**தூ**ரத்தே கேட்ட சத்தம் வரவர இப்போது அதிகரித்துக்கொண்டிருப்பதைப் போல இருந்தது. நிசப்தமான அன்றைய சூழலை இடைவிடாத அந்த இரைச்சல் ஓசை பயங்கரமானதாக மாற்றியது. அவர்களுக்கு இது வழமையானது தான். எனினும் ஏதோ ஒரு அசாதாரணம் இன்று இருப்பதாக அவர்களுக்குப்பட்டது.

எதிரி விளக்கு வைத்த குளம் வரை முன்னேறியிருந்தான். அது வன்னியின் ஒரு காட்டுக்கிராமம். வவுனியாவிலிருந்து வடக்காக கண்டிப்பிரதான வீதியில் இருந்தது. முன்னேறும் இராணுவத்தை கட்டம் கட்டமாக புளியங்குளம் வரை தடுத்து தாமதப்படுத்துவது என்பது திட்டமாகஇருந்தது. முன்னேறும் இராணுவத்தை தாக்கி, தடுத்து, தேவையானபோது நகரவிட்டு மீண்டும் தாக்கி, இப்படி புளியங்குளத்தில் அமைக்கப்பட்ட ''கொலைப் பொறி'' நோக்கி இராணுவத்தை கவர்வதற்காய் 'ஜயசிக்குறு' படைகள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்தன.

06,06.1997 விளக்குவைத்த குளம் முன்னரங்க நிலைகளில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி போராளிகள் நின்றார்கள். காலை அமைதியாக விடிந்தது. எனினும் அதிகாலை முதல் கேட்டவாறிருந்த அந்தச் சத்தம் மட்டும் நிற்கவேயில்லை. மெல்ல மெல்ல அந்தச்சத்தம் அவர்களை நோக்கி நகர்வதாகப்பட்டது.

''மச்சான், டாங்கிச்சத்தம் போல கிடக்குது''

அவர்களில் ஒருவன் காவலரணொன்றின்மேல் ஏறி நின்று அவதானித்துவிட்டுச் சொன்னான்.

''இண்டைக்கு திருவிழாப் போல இருக்குது''

அவர்கள் தங்களுக்குள் கதைத்துக்கொண்டார்கள்.

''டேய்! வந்தா வரட்டும். எங்கட பொசிசனைக் கடந்து போறதை ஒருக்காப் பாப்பம்''

இப்படித்தான் எப்பவுமே அவர்கள் கதைத்துக்கொள்வார்கள். இன்றும் அதே போலவே கதைத்தவாறு காலைக்காவலுக்கான ஒழுங்குகளில் ஈடுபடத்தொடங்கினர்.

விரைவிலேயே அவர்கள் எதிர்பார்த்த 'திருவிழா' தொடங்கிவிட்டது. அவர்களின் முன்னரங்க நிலைகளைச் சுற்றி எதிரி ஏவிய பீரங்கிக்குண்டுகள் வீழ்ந்து வெடிக்கத்தொடங்கின. இதுவரை தூரத்தே கேட்ட இயந்திரங்களின் உறுமல் ஓசை அவர்கள் இருந்த திசையில் நெருங்கத் தொடங்கியது. முறிந்து விழுந்த காட்டு மரங்களினூடு வெடித்துச் சிதறிய எறிகணைகளின் கந்தகப் புகைபரவிக்கொண்டிருந்தது.

கப்டன் அறிவு அவன்தான் காவலரண் துவாரத்தினூடாக தூரத்தே தெரிந்த கரியஉருவத்தை முதலில் அவதானித்தான். டாங்கி! அவனது நிலையை நோக்கி வந்து கொண்டிருந்தது.

சண்டையின் தீவிரம் சற்றுக் கூடியிருப்பதாகப் பட்டது. தோழர்கள் தமது துப்பாக்கிகளால் எதிரி மீது சுடத்தொடங்கினர். சண்டை உக்கிரம் கண்டது. கனரக ஆயுதங்கள் எதுவும் அவர்களிடம் இருக்கவில்லை: டாங்கி எதிர்ப்பு ஆயுதங்களும்தான். இலகு இயந்திரத் துப்பாக்கிகளால் சுட்ட ரவைகள் வெறுமனே டாங்கியில் பட்டுத் தெறித்து விழுந்தன.

முன்னரங்கில் இருந்த எமது நிலைகள் ஒவ்வொன்றாய் எதிரியால் சிதைக்கப்பட்டன. வீரர்கள் வீழ்ந்துகொண்டிருந்தனர். டாங்கி ஏவிய ஒரு எறிகணை அறிவினுடைய தோழர்களை வீழ்த்தியது. சிதைந்த நிலைகளில் இருந்து சென்று கொண்டிருந்த இறுதி எதிர்ப்புகளும் குறைந்துகொண்டிருந்தன. எதிரி உற்சாகமடைந்திருந்தான். வேகமாக டாங்கியை நகர்த்தினான்.

அறிவினுடைய சிதைந்தகாவலரணில் இப்போது வீரச்சாவடைந்துவிட்ட தோழர்களின் வித்துடல்களும். ரவை முடிந்துவிட்ட துப்பாக்கிகளும் மட்டுமே தனித்திருந்தன.

அந்தக்காவலரண் வரிசையில் எஞ்சியவர்களில் அவன் மட்டுமே தனித்திருந்தான். எதிரியின் நகர்வை தடுத்தேயாகவேண்டிய கட்டாயம் அவனுக்கிருந்தது. மறியடிப்பு அணிகள் அங்கே வரும்வரை இராணுவத்தின் நகர்வை குறைந்த பட்சம் தாமதப்படுத்த வேண்டிய நிலையை அவன் மட்டுமே உணர்ந்தான்.

கைவசம் இருந்த குண்டுகள் இரண்டுடனும் சிதைந்த நிலையை விட்டுவெளியே வந்தான். அவனது நிலையை நோக்கி வந்த டாங்கி இப்போது மிகவும் நெருங்கியிருந்தது. அறிவு எறிந்த முதலாவது குண்டு டாங்கியின் முன்னால் வெடித்துச் சிதறியது. டாங்கி அதிர்ந்து நின்றது; ஆனால் விரைவிலேயே அதன் சக்கரங்கள் மீண்டும் உருளத் தொடங்கின.

இறுதியாக அவனிடமிருந்தது ஒரேயொரு கைக்குண்டு.

அவனுக்கிருந்த கடைசித் தெரிவு டாங்கியை மிக நெருங்கி குண்டை எறிவது, அல்லது சொற்ப கணத்தில் இடித்துச் சிதைக்கப்பட இருந்த நிலையின் அருகிலிருந்து பின்வாங்கிச் செல்வது.

இறுதி முயற்சி எமது மரபுக் கேயுரிய தெரிவு. டாங்கி அவனது காவலரணை முட்டிமோத இருந்த கடைசித்தருணத்தில் தன்னிடமிருந்த கையெறிகுண்டை வெடிக்கவைத்தான்.

தனது சாவிற்கான முடிவு அவனுக்குத் தெரிந்தேயிருந்தது. எனினும, அவன் கோழையாகிப் போக விரும்பவில்லை.

அவன் நேசித்த மண்மீது டாங்கியின் சக்கரங்களால் சிதைக்கப்பட்ட அவனது வித்துடல் கிடந்தது. இறுதி வரை அவனிடம் உயர்ந்திருந்த துணிவு வரலாற்றில் இன்று அவனை உயர்த்தி நிற்கின்றது. ○

**— அன்பு —**



www.eelamview.com

www.eelamview.com



# -லெப். கேணல் - சாண்டோ-

மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதி, எதிரி இராணுவ அணியொன்று எம்மால் வழி மறித்துத் தாக்கப்படுகிறது. ஆரம்பத்தில் திகைத்த எதிரி சுதாகரித்துக் கொள்ள சண்டை வலுவடைகின்றது. தனது ரி - 56 - 2ஐ எதிரியை நோக்கி இயக்கியபடி அவன் விரைந்து முன்னேறிக்கொண்டிருந்தான். சீறிவரும் ரவைகளையோ, வீழ்ந்து வெடிக்கும் எறிகுண்டுகளையோ அவன் அதிகம் லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை. வீழ்த்தப்பட்ட எதிரியின் சாவை மேலும் இரு ரவைகளால் உறுதிப்படுத்தியவனை, ஒரு திசையில் இருந்து பலகுரல்கள் அழைக்க, தனது முதுகில் தொங்கிக்கொண்டிருந்த அந்த கனத்த தோள்ப்பையை சரிசெய்தவாறு அங்கு விரைகிறான்.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களையும், விழுப்புண்ணடைந்த போராளிகளையும் சுமந்து கொண்டு தளம் திரும்புகிறோம். சீரற்ற கானகப் பாதைகள் வழியாக, சிற்றாறுகள் ஊடாக படர்மலைகள் மேலாக பயணம் தொடர்கிறது. காவுப் படுக்கையொன்றுக்குத் தோள்கொடுத்து அப்போராளியை மாற்றிவிட்டவன், அருகில் வந்த போராளி களைப்பு மிகுதியால் நடக்கச் சிரமப்படுவது கண்டு அவனது ஆயுதத்தையும் தான் வாங்கிக்கொள்கிறான். கனமான தோள்ப்பை, இரு ஆயுதங்கள், காவுப்படுக்கை, ஆனாலும் அவன் நடையில் எந்தத் தளர்வையும் காணமுடியவில்லை.

''சாண்டோ'' இவனை நினைக்கும் போதெல்லாம் இவ்வாறான எண்ணற்ற களக் காட்சிகளே எம்முன் விரியும்.

மிக அமைதியான சுபாவமும், நல்லியல்புகளும் கொண்ட உயர்வகுப்பு மாணவனான அமுதனின் சிந்தனைகளும் உயர்வானவையாகவே இருந்தன. தேசவிடுதலையின் தேவையுணர்ந்து கொண்டவன், 1989ம் ஆண்டு காலப்பகுதியில் தன்னைத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைத்துக்கொள்கிறான். பயிற்சி முடித்து வெளியேறியவனுக்கு உடனடியாக களம் காணும் வாய்ப்பு கிடைக்கிறது.

அம்பாறை மாவட்டத்தில் இருந்து இந்திய இராணுவம் வெளியேற ஆரம்பித்த நேரம். அப்பகுதியிலிருந்த இரு பாரிய தேசத்துரோகிகளின் முகாம்கள் எம்மால் தகர்த்தழிக்கப்படுகின்றன. இந்த முதற்சண்டையே அவனையொரு போர்க்குணமிக்க போராளியாக இனங்காட்டியது. தொடர்ந்துவந்த சண்டைகள் இதனை மேலும் உறுதிப்படுத்துபவையாக இருந்தன. இயல்பாகவே அவன் மிக அமைதியானவன், இரக்க சுபாவம் கொண்டவன். ஆனால் களத்தில் மட்டும் அவன் இவற்றிற்கு நேரெதிரானவே இருந்தான்.

நெடுந்தூர வேவுப்பயிற்சிநெறியொன்று ஆரம்பிக்கப்பட்டபோது அவனும் அதில் இணைத்துக்கொள்ளப்படுகிறான். அவனது தாங்குமாற்றல், பொறுமை, போர்க்குணம் என்பன இப் பயிற்சிநெறியைத் திறம்படச் செய்ய அவனுக்குப் பெரிதும் உதவின. பின் நாட்களில் அவனது வேவுப்பணி விரிவடைந்து பயன்மிக்க விளைவுகளை எமக்குப் பெற்றுத்தந்தது.

வேவு, சண்டையென தன்னை நன்கு நிலைப்படுத்திக் கொண்டிருந்தவனுக்கு எதிர்பாரா இடமொன்றில் இருந்து அழைப்பு வருகிறது. ''சாண்டோவ மெடிசின் படிக்கப் போகட்டாம்'' இது அவனுக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடியதொரு விடயம் அல்லவாயினும், விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு கட்டளையை நிறைவேற்றும் உயர் இராணுவ ஒழுக்கத்தை அவன் காட்டினான். ''உத்தரவு நிறைவேற்றம்'' என்றவகையில் ஆரம்பத்தில் இது அமைந்திருந்தாலும் பின் நாட்களில் அதற்குள் அவன் ஆழ்ந்துபோனான். களமருத்துவப் பயிற்சியை நிறைவுசெய்தவனை சிறப்புத் தளபதி சந்தித்து கதைத்தபோது ''எல்லாச் சண்டைக்கும் என்னை விடோணும்'' என்பது மட்டுமே அவனது ஒரே கோரிக்கையாக இருந்தது.



## போராளியின் குருதிச்சுவடுகள்

லெப். கேணல்

**சாண்டோ / இளவள்ளல்**

முத்துலிங்கம் அமிர்தலிங்கம்

களுவாஞ்சிக்குடி மட்டக்களப்பு

பிறப்பு:- 27 / 12 / 1971

வீரச்சாவு:- 19 / 05 / 2000

பொதுவாக எமது போராட்ட வாழ்வு கரடுமுரடானது. துன்பங்கள் நிறைந்தது. அதிலும் தென்தமிழீழ போராட்ட வாழ்வென்பது சராசரி மனித தாங்குமாற்றலுக்கு பலவேறு வழிகளிலும் சவால்விடுவது. இதில குறிப்பிடத்தக்க ஒன்று மருத்துவம்.

விழுப்புண் அடையும் போராளிகளை காவுப் படுக்கையில பாதுகாப்பான இடம்வரை காவிவர பல மணிகள் ஏன நாட்கள்கூட ஆகலாம். உரிய மருந்துகள், உபகரணங்கள் இன்றி ''புதிய வழிமுறைகள்'' புகுத்தவேண்டிவரலாம், பாரிய இராணுவ நடவடிக்கைகளின் போது மருத்துவமனையே காவுப்படுக்கைகளில் நெடுந்தொலைவு நகரவேண்டிவரலாம், சுற்றிவளைத்துத் தாக்கப்படலாம். உணவு குடிநீரின்றி இடர்படலாம் இப்படி இன்னும் பல.

சராசரி மருத்துவப் போராளி ஒருவரிடமும் எதிர்பார்க்கப்படும், துறைசார் அறிவாற்றலுக்கு அப்பாலும் இங்கு செயற்படும் மருத்துவப் போராளியின் கொள்ளளவு விரிவடையவேண்டிய தேவை இங்கு தவிர்க்கமுடியாததாகிறது.

களமருத்துவப்பணியை மிகுந்த ஈடுபாடுடன் செயற்படத்தொடங்கினான். முதுகில் கனத்த தோள்ப்பை, கையில் அவனது அதே ரி-56-2, மார்பில் நான்கு ரவைக்கூடுகள். எறிகுண்டுகள், ஒரு கூரிய கத்தி (இதற்கு தனியே களத்தில் நிறைய அனுபவமுண்டு). நீண்டதொலைவு நடையில் (சமயங்களில ஓட்டம) இவை பலருக்கும் சோர்வுதரும் சுமைகள். அவனுக்கோ சுகமான சுமைகள். இவனுக்கென்ன பணிஸ் மென்ரா'' பலர் பல சந்தர்ப்பங்களில் கேட்டிருக்கிறார்கள். இவற்றிற்கெல்லாம அவன் தந்த விளக்கம் அந்த ஒரு சிக்கனமான புன்னகையே.

1993 காலப்பகுதி. தவளை நடவடிக்கைக்காக பெருந்தொகையான போராளிகள் வடபுலப் போர்முனைக்குச் சென்றுவிட்டிருந்த நேரம். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய சிறிலங்கா படைத்தரப்பு 'சுமண' என்ற பெயரில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்து எம் தளப்பிரதேசம் எங்கும் அதனை விரிவுபடுத்தியது. விசேட படையினரை உள்ளடக்கியதாக ஆங்காங்கு பெரும் முகாம்கள் நிறுவப்பட்டன. இருந்தால் சுற்றிவளைப்பு நகர்ந்தால் பதுங்கித் தாக்குதல் என்ற நிலைமை. இன்றும் போராளிகளால் நினைவுகூரப்படும் ''கஞ்சிப்பிரச்சனை'', ''சோமாலியா பேஸ்'' போன்ற அருஞ்சொற்பதங்கள் அறிமுகமாகிய அந்த நாட்கள்...

அவனே அந்த நகரும் மருத்துவமனையின் பொறுப்பாளனாக இருந்தான். பாறை ஒன்றில் சிந்தனை வசப்பட்டவனாக இருந்தவனிடம் ''என்ன சாண்டோ கடும் யோசின'' எனக் கேட்கிறோம். ''மூன்று நாளா பெடியங்களுக்கு ஒண்டும் இல்ல'' மிகுந்த கவலையுடன் அவன் கூறினான். அன்று மதியம் மருத்துவப்பகுதியில் அவித்த இறைச்சி வழங்கப்பட்டதாக அறிகிறோம். இது பற்றி அவனிடம் கேட்டபோது, ''ஒண்டும் அப்பிடல ஒரு பெரிய 'கவறகோசான்' புடிச்சனான்''. அதிர்ந்து போனோம் நாம் நச்சுப் பிராணி என ஒதுக்கும் பிராணி. ''உரிச்சுப்பார்த்தன வயித்துப்பக்கம் நீலப்பை போல இருந்தது. எடுத்துப் போட்டு அவிச்சு சாப்பிட்டுப் பார்த்தன் கனநேரம் ஒண்டும் செய்யலல அதுதான்...''

மாவட்ட மருத்துவப் பொறுப்பாளனாக அவன் நியமிக்கப்பட்டான். அந்த வேளைகளில்கூட போராளிகளின் நலன்பேணல் நடவடிக்கைகளில் தனது உடலுழைப்பை மிகுதியாக ஈடுபடுத்தவும் அவன் தவறவில்லை. அவனது இருப்பிடத்தைச் சுற்றி பயன் தரும் பயிர் வகைகள் பச்சைப் பசேலென காட்சி தரும். மண்வெட்டி பிடித்து அவன் கைகள் கன்றிப் போயிருக்கும். ஈர்க்கு வார்ந்தெடுத்து விளக்குமாறு கட்டும் அவன் கைகள் காயப்பட்டிருக்கும். சமயங்களில் நிறைந்துவிட்ட மலக்குழியை அவன் கைகள் தனியே நின்று இறைத்துச் சுத்தம் செய்யும். ''என்னடாப்பா சண்டோ ஆ நம் பெடியனுகள பிடிச்சு செய்யலாந்தானே'' இதற்கும் அவனிடமிருந்து அந்தச் சிக்கனமான புன்னகையே பதிலாகக் கிடைக்கும்.

தென்தமிழீழ தென் எல்லையான பூமுனை தொடக்கம் திருமலை வரை அதுவரை களம் கண்டு கடமையாற்றியவனை வடதமிழீழ போர்முனை அழைக்க, ஏராளமான எதிர்பார்ப்புகளுடன் அவன் புறப்படுகிறான். ஒவ்வொரு போராளிகளுக்கும் இருக்கும் தம் தலைவனை ஒரு முறையாவது பார்த்துவிட வேண்டும் என்ற துடிப்பு அவனிடம் நிச்சயம் இருக்கவே செய்தது. தனது தலைமை மேல் அவன் மிகுந்த பற்று அல்ல பக்தியையே கொண்டிருந்தான். இது கவிரவும் தன்மடியில் உயிர் விட்ட கப்டன் றீகனின் கடைசி வரிகள் தந்த தாக்கமும் விரைவில தலைவனைச் சந்திக்க வேண்டும் என்ற உணர்வை மேலும் வலுப்படுத்தியிருக்கும் என்பதில ஐயமில்லை. ''மச்சான் நான் சாகப் போறன எண்டு எனக்கு நல்லாத்தெரியும். நான் அதுக்கு கவலப்படல்ல. ஆனா தலைவரைப் பார்க்காம சாகிறது தான் பெரிய கொடும''

முக்கியமான சில மருத்துவப் பொருட்களைப் பெற்றுச்செல்ல வடதமிழீழத்திலிருந்து அன்று தான் அவன் வந்து சேர்ந்திருந்தான். நீண்ட தொலைவு நடையால் உடன் வந்தவர்கள் எல்லாம் 'அப்பாடா'' என்று ஆங்காங்கு சரிந்து கிடக்க, அவன் அவசர அவசரமாக தனது ரி-56-2ஐ சுத்தம் செய்துகொண்டிருந்தான். சண்டை ஒன்றிற்காக அணிகள் புறப்பட ஆயத்தமாகின்றன. அந்த வரிசையில் அவனும்... ''என்ன சாண்டோ இப்பதான் வந்த நீ 'ரெஸ்ட்' எடுக்காம, கனதூரம் போகோணும்'' சிறப்புத்தளபதி அவனிடம் கூறுகிறார். அவனிடமிருந்து அந்த சிக்கனப் புன்னகையே விளக்கமாக அமைகிறது. அவர் சிரித்தபடி அவனின் தோள்களில் தட்டிக்கொடுக்கிறார். ஆம் அவருக்குத் தெரியும் தூரம், பாரம் எல்லாம் அவனுக்குத் தூசு போன்றவை என்று. இரண்டு நாட்களின் பின் ஸ்ரீலங்கா வானொலியில் ''கறடிக்குளம் இராணுவ முகாமிற்கருகில் 'பயங்கரவாதிகள் இராணுவத்தினர் மீது பதுங்கியிருந்து தாக்கியதில் பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்...''

## — மீனாடான் —

கொடுக்கப்பட்ட எல்லா வேலையையும், நேர்த்தியாகவும், அர்ப்பணிப்புத் தன்மையுடனும திறம்படச்செய்யும் தன்மைகொண்ட அவன் விரைவிலே தளமருத்துவப் பொறுப்பாளனாகப் பணிநிலைப்படுத்தப்படுகிறான். தோள்ப்பை கைமாறியதேயன்றி ஒவ்வொரு சண்டையிலும் அவனது துப்பாக்கி இயங்கிக் கொண்டேயிருந்தது. எதிரியை அவன் ரவைகள் துளைத்தன. அதேபோல் எதிரியின ரவைகளும் அவ்வப்போது அவன் உடலில் ஆழப்பதியவே செய்தன.



www.eelamview.com

www.eelamview.com



பல சந்தர்ப்பங்களில் அவனது மருத்துவப் பணி 'இயக்கம்' என்ற வட்டத்திற்கு அப்பாலும் விரிவடைந்திருந்தது. அதற்கு கட்டாயமும் இருக்கவே செய்தது. அன்று முதல் இன்று வரை எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துள் எந்த மருத்துவமனையும் இயங்க ஸ்ரீலங்கா அரசு அனுமதிக்கவில்லை. இரவு வேளைகளில் எந்த அவசர நோயாளியானாலும் அவரை இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல முடியாது. முயற்சித்தவர்கள் மீது கோழைத்தனமான கொடூரமான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு அந்த அவசர நோயாளர்களே அவலமாய் சாவடைந்த சம்பவங்கள் பலவுண்டு. இதனால் தவிர்க்கமுடியாத வேளைகளில் உதவ வேண்டிய தேவை அவனுக்கு அவ்வப்போது வந்து சேரவே செய்தது.

அன்றும் அப்படித்தான் குழந்தைப்பேற்றுக்கான தாயின் பரிதாபகரமான, சிக்கலான நிலைபற்றி அப்பெண்ணின் தாயும், தந்தையும் கண்ணீருடன் அவனிடம் விபரித்துக்கொண்டிருந்தனர். இது அவனின் மருத்துவ அறிவிற்கு அப்பாற்பட்டது. என அனைவரும் எண்ணியபடியிருக்க, ஒரு பையில் சில மருத்துவப்பொருட்களை எடுத்து வைத்துக்கொண்டு அவர்களுடன் அவன் புறப்படுகிறான். அடுத்த நாள் அத்தாயும், தந்தையும் முகாமிற்கு வருகின்றனர்; கண்களில் கண்ணீரில்லை, கைகளில் கற்கண்டு; "நான் யாழ்ப்பாணத்தில நிற்கக்குள்ள இது சம்மந்தமா கொஞ்சம் படிச்சனான்" அவன் அந்த அமைதியான புன்னகையோடு விளக்கினான்.

யாழ் குடாநாட்டிலும், வன்னிப்பெருநிலப்பரப்பிலும் இடம்பெற்ற பெரும் சமர்களில அவனது ரி-56-2 வும் பங்கெடுத்துக் கொள்கிறது. ரவை பதிந்து எலும்புடைந்த காலுடன் இச்சமர்க்களமெங்கும் அவன் சலிப்பின்றி நடந்தான. இறுதியில முழுநேர சமர்க்களப்போராளியாக விரும்பியவன் தளபதியிடம் அதனை வெளிப்படுத்தினான. கோரிக்கை விவாதங்களின் பின ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மேஜர் தர கட்டளை அதிகாரிகள் பயிற்சி நெறியொன்றில் அவன் இணைக்கப்படுகிறான்; அங்கும் அவன் "அமைதியான" சாண்டோவாகவே இனங்காணப்படுகிறான். அவனது பிறருக்குதவும் பண்பு, கடும் உழைப்பு, பட்டறிவு என்பன அப்பயிற்சிக்கல்லூரிப் போராளிகளிடம் அவனுக்கொரு தனித்துவத்தைப்பெற்றுத்தந்திருந்தன.

ஆனையிறவு பெருந்தளத்தை வீழ்த்த எடுக்கப்பட்ட நடவடிக்கையில் இக்கல்லூரிப் போராளிகளின் பங்களிப்பு தேவைப்பட அங்கு அவர்கள் அழைக்கப்பட்டனர். அங்கு அவன் எல்லைப்படை வீரர்களுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டு மாசார் பகுதி காப்பரண் வரிசையில் விடப்படுகிறான். சண்டை ஆரம்பமானதும் சண்டையின் போதான வெடிபொருள் வழங்கற்பணிக்காக, ஒரு பகுதிக்குப் பொறுப்பாக நியமிக்கப்படுகின்றான். ஆனையிறவு கைப்பற்றப்பட்ட நிலையில் அங்கு செல்கிறோம். இயக்கச்சியில் ஒரு வீதியில் வாகனக் கண்ணிவெடிகளை அகற்றும் வேலையில் அவன் மும்முரமாக ஈடுபட்டிருந்தான். அங்கு பத்திற்கு மேற்பட்ட கண்ணிவெடிகள் அவனால் அகற்றப்பட்டு செயலிழக்கச்செய்யப்பட்டு கிடந்தன. "இந்த ரோட் சப்ளைக்கு நல்லம் அது தான்..." "அதுசரி எப்ப கண்ணிவெடி பிரிவில சேர்ந்தீங்க" பம்பலாக கேட்கிறோம். "பிரச்சனையில்ல கல்லூரியில டிறமா பயிற்சி தந்தவங்க அதையும் பயன்படுத்தி பாப்பம் எண்டுதான்" அந்த வழமையான புன்னகையுடன் அவன் பதிலளிக்கிறான். தொடர்ந்து அவன் ஒரு குழுவிற்கு பொறுப்பேற்று பளைநோக்கி முன்னகர்ந்து சென்றான். பின் மீளவும் அவர்கள் தத்தம் படையணிகளுக்குத் திரும்ப அவனும் தான் சார்ந்திருந்த ஜெயந்தன் படையணிக்குத் திரும்பி யாழ் நோக்கிய தாக்குதலுக்காக கொம்பனி ஒன்றிற்குப் பொறுப்பேற்கிறான்;

சாவகச்சேரியைக் கைப்பற்றும் நோக்கில் படையணிகள் விரைகின்றன. இடைவந்த எதிர்ப்புக்களை முறியடித்து அவனது கொம்பனி மட்டுவிலை அடைகிறது. அங்கு எதிரி எதிர்ப்புக்களை முறியடித்தபடி அவ்வணி முன்னேறிக்கொண்டிருக்கையில், இராணுவ விசேட படையினரின் ஒரு முகாம் எதிர்ப்பட அங்கு சண்டை வலுக்கிறது.

சில போராளிகள் வீரச்சாவடைய பலர் காயமடைகின்றனர். நிலைமை இன்னும் இறுக்கமாகவே இருக்கிறது; உடனடியாக நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருமாறு சிறப்புத் தளபதியிடமிருந்து இறுக்கமானதொரு கட்டளை கிடைக்கிறது. வலுவான எதிர்ப்பு வந்துகொண்டிருக்கும் அந்தப் பகுதியை அவன் நிதானமாக பார்க்கிறான். அடுத்து என்ன நடக்கும் என அனைவருக்கும் தெரிந்ததால் முடிந்தவரை அவர்கள் அவனுக்கு காப்பு வழங்குகின்றனர். இரு கைக்குண்டுகளின் வெடியோசையைத் தொடர்ந்து எதிர்ப்பு வலுவிழக்கிறது. மட்டுவில் மட்டுமல்ல சாவகச்சேரியும கைக்குள் வருகின்றது. ஆனால் அந்த வீரன்......

"சாண்டோண்ணைக்கு சண்டை அறிக்கை எடுக்கிறதெண்டா ரெண்டு தாள் வேறயாக வேணும்" அறிக்கைப் போராளிகள் அலுத்துக் கொள்வதுண்டு.......

ஆம் தமிழீழத்தின் பரந்த பரப்புக்கள் யாவும் களம் கண்டவன்.

தம்பிலுவில், திருக்கோவில் தேசத்துரோகிகள்முகாம் தாக்குதல்.

பழுகாமம் தேசத்துரோகிகள் முகாம் தாக்குதல்.

12ம் கொலனி இராணுவ முகாம் தாக்குதல்.

அருந்தலாவ பொலிஸ்முகாம் தாக்குதல்.

பெண்டுகள் சேனை பதுங்கித்தாக்குதல்.

மண்முனை இராணுவம் மீதான பதுங்கித் தாக்குதல்.

பாலையடி வெட்டை இராணுவம் மீதான பதுங்கித் தாக்குதல்,

உன்னிச்சை இராணுவ ரோந்து மீதான தாக்குதல்.

புனானை இராணுவம் மீதான தாக்குதல்.

பிள்ளையாரடி இராணுவ முகாம் தாக்குதல்

குவாட்டஸ் இராணுவ முகாம் தாக்குதல்.

சிங்கபுர ரோந்து மீதான தாக்குதல்.

கொழுந்திமடு ரோந்து மீதான தாக்குதல்.

கொழும்பு வீதி ரோந்து மீதான தாக்குதல்.

களளியந்தீவு ரோந்து மீதான தாக்குதல்.

சூரி தடையில் ரோந்து மீதான தாக்குதல்.

கட்டுவனில் இராணுவ ரோந்து மீதான தாக்குதல்.

போவத்தை இராணுவ ரோந்து மீதான தாக்குதல்.

கட்டுமுறிவு எஸ். எவ். முகாம் மீதான தாக்குதல்.

பூமாஞ்சோலை இராணுவ முகாம் தாக்குதல்,

கட்டுமுறிவு இராணுவ முகாம் தாக்குதல்.

தரவைக்குள இராணுவ முகாம் தாக்குதல்.

பெண்டுகள் சேனை இராணுவ முகாம் தாக்குதல்.

சூரியக்கதிர்.

சத்ஜய.

ஜயசிக்குறு

ஓயாத அலைகள்......

என அந்தப் பட்டியல் இன்னும் விரியும், பார்டுமீன் நாட்டின் பாசறை ஒன்று அவனை புடம்போட்டு போராளியாக்கியது யாழ் நாட்டின் மட்டுவில் மண் அவனை மாவீரனாக்கியது.

"சாண்டோ அமைதியானவன் தான் ஆனால் களங்களிலல்ல."

O

---

# வழித்தடம்

வன்னியின் மையப்பகுதியை ஊடுருவிய எதிரி மணலாறு, ஒட்டுசுட்டான், மாங்குளம், நெடுங்கேணி, மன்னார் என நீண்டு விரிந்திருந்தான். வன்னியின் ஒரு பரந்த பிரதேசம் எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. பல கிலோமீற்றர் தூரம் நீண்டு வளைந்திருந்த எமது காவலரண் வரிசை எந்த இடத்திலும் உடைக்கப்பட்டு எதிரி முன்னேறலாம் என்ற நிலை அப்போது இருந்தது. ஒரு சில மாதங்களின் முன்னர் தான் எதிரி பெருமெடுப்பில் மேற்கொண்ட 'ரணகோச-05' நடவடிக்கை முறியடிக்கப்பட்டது. அப்போது இராணுவம் கரிப்பட்ட முறிப்பிற்கு வடக்காக அம்பகாமம் பகுதியூடாக நகரலாம் என ஒரு எதிர்பார்ப்பு இருந்தது.

15-10-1999 அதிகாலை வேளை; புலிகளின் படையணிகள் தற்காலிகமாக அமைத்திருந்த காவலரண் தொடரை உடைத்துக் கொண்டு சிங்களத்தின் 'வோட்டர் செட்' இராணுவ நடவடிக்கை தொடங்கியது. பெரும் படைப்பிரவாகம், பெரும் எதிர்பார்போடு படையினர் உக்கிரமான அந்தச் சமரைத் தொடங்கினர்.

அன்றைய களச்சூழல் மிகவும் நெருக்கடியானது. மட்டுப்படுத்தப்பட்டிருந்த எமது போர் அணிகளில் பெரும்பகுதி தலைவர் அவர்களின் 'ஓயாத அலைகள் -03' நடவடிக்கைக்கான பயிற்சிகளிலும், தயாரிப்பு வேலைகளிலும் ஈடுபட்டுக்கொண்டிருந்தன. என்னும் எதிரியின் நகர்வு ஆபத்தானது. முறியடிப்பு அவசியமானது. எனவே வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையில் அணிகள் களமிறக்கப்பட்டன.

அம்பகாமம் வனம் பீரங்கிக் குண்டுகளால் அதிர்ந்து கொண்டிருந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட அணிகள் முறியடிப்பில் இறங்கின. இடைவிடாத பீரங்கி மழையில் நனைந்தவாறு புலிகள் சமராடத்தொடங்கினர்.

புலிக்குட்டி என்ற போராளி, சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவிற்கு மாத்திரமல்ல போராட்டத்திற்கே புதியவன். ஐந்து பேரடங்கிய ஒரு முறியடிப்பு அணியில் அவன் இருந்தான். அன்றைய சண்டையில் அவர்கள் சாதிக்க வேண்டிய இலக்கு கடுமையானதாக இருந்தது. இராணுவம் ஊடுருவிய ஒரு கேந்திரமான நிலையை அவர்கள் மீளக்கைப்பற்ற வேண்டும். எதிரியின் கைவசம் உள்ள அந்த நிலையின் அருகில சென்ற அணிகள் எல்லாம் ஏற்கனவே எதிரியின் கடுமையான எதிர்ப்பால் சிதைக்கப்பட்டு விட்டன. எஞ்சிய அவர்கள் மட்டுமே இப்போது அந்த நிலையைப்பிடிக்க வேண்டியிருந்தது.

தமது இலக்கை சென்றடைய இன்னமும் இருபது மீற்றர் தூரம் மட்டுமே உள்ள நிலையில் அவர்களுடைய அணியில் ஆக மொத்தம் இரண்டு பேர் மட்டுமே இருந்தனர். எதிரியின் இயந்திரத்துப்பாக்கி ஒன்று தொடர்ச்சியாக அவர்களை நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்தது. அந்த நிலையை கைப்பற்றினால் தான் மிகுதி முன்னேற்றம் இவர்களுக்கு சாத்தியமானது.

போரில் அனுபவமிக்க, போர்க்களங்களின் கடினங்களுக்குப் பரிச்சயமான போர் வீரர்களே திகைப்படையும் கொடிய களச்சூழல், எல்லா அணிகளும் எதிரியால் முறியடிக்கப்பட்டுவிட்ட நிலை. எஞ்சிய அணியிலும் அவர்கள் இருவரும மட்டுமே இப்போது இருந்தனர். அவர்களுக்குப் பின் வாங்குமாறு கட்டளை வந்தது.

## — அன்பு —

ஆனாலும் இன்னமும் அவர்களது துப்பாக்கிகள் சடசடத்துக் கொண்டிருந்தன; தொடர்ந்தும் அந்த இரண்டு வீரர்களும் முன்னேறிக்கொண்டிருந்தனர். எதிரி தனது எதிர்ப்பில் தீர்க்கமாக இருந்தான்.

"மச்சான் நான் காயப்பட்டிட்டன்"

புலிக்குட்டியின் அருகிலிருந்த அவனது கடைசித்தோழனும் எதிரியின் குண்டடிபட்டு விழுந்தான். வேதனையுடன் ஒலித்த அவனது குரலில் தன் தோழனுடன் தொடர்ந்து முன்னேற முடியவில்லையே என்ற ஆற்றாமையிருந்தது.

"பிரச்சனையில்லையடா, நான் தனியப் போறன்"

(11ம் பக்கம் பார்க்க)



www.eelamview.com

www.eelamview.com



# சர்வாதிகார அரசும் – மாணவர் எழுச்சியும்

தமிழ் மாணவர் சமூகம் மீண்டுமொருமுறை சிங்கள அரசின் அராஜகத்திற்கு எதிராக தனது போர்க்குணத்தை வெளிப்படுத்தி போராடி வருகின்றது.

யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னை நாள் மாணவர் தலைவன் கி. திவ்வியன் அவர்கள் சிங்கள இராணுவத்தால் கைது செய்யப்பட்டு, சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதைத் தொடர்ந்து அவரை உடனடியாக விடுதலை செய்யக் கோரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

மாணவர்களின் போராட்டத்திற்கு பழிவாங்குமுகமாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை இழுத்து மூடியுள்ள சிங்கள அரசு ஆயிரக்கணக்கான மாணவர்களது எதிர்காலத்தை நிர்க்கதிக்குள்ளாக்கியுள்ளது.

பல்கலைக்கழகத்தை மூடினால் மாணவர்கள் அடிபணிந்து எதிர்ப்புப்போராட்டத்தைக் கைவிட்டுவிடுவார்கள் என அரசு நினைத்தது. ஆனால், கைதுசெய்யப்பட்ட மாணவர் தலைவனை விடுதலை செய்யுமாறு கோரி - பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாணப் பாடசாலை மாணவர்கள் பாடசாலைப் பகிஸ்கரிப்புச் செய்து எதிர்ப்புப் போராட்டத்தை விரிவாக்கி சிங்கள அரசின் முகத்தில் அறைந்துள்ளனர்.

யாழ்ப்பாண மாணவர் சமூகத்தின் அரச எதிர்ப்புப்போராட்டம் வவுனியா - மட்டக்களப்பு - வன்னி என தமிழர் தாயகம் எங்கும் பரவியுள்ளது.

முன்னர் யாழ் பல்கலைக்கழகத்தில் பிறப்பெடுத்து தமிழீழமெங்கும் பரவி - புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் அரசியல் விழிப்புணர்வைத் தூண்டிய பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுக்கு சிங்கள இராணுவம் தண்டனை கொடுக்க விரும்பியதே மேற்குறித்த பல்கலைக்கழக மாணவனது கைதும் அவர் மீதான சித்திரவதைக்கும் பிரதான காரணமாகும்.

சிங்கள இராணுவத்தின் எச்சரிக்கைகளையும் மீறி, முன்னர் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்ச்சிக்காக கடுமையாக உழைத்த மாணவர் தலைவர்களுள் திவ்வியனும் ஒருவராவார்.

எழுச்சிக்குக் காரணமான மாணவர்களைத் தனித்தனியாக தண்டித்து - அதன் மூலம் ஏனைய மாணவர்களை பயமுறுத்தி எதிர்காலத்தில் இத்தகைய அரச எதிர்ப்புப் போராட்டங்களை ஒடுக்க முனையும் சிங்கள அரசின் வழமையான அடக்குமுறைச் செயற்பாடே இந்தக்கைதாகும்.

கைதிற்கும் - சித்திரவதைக்கும் அப்பால் மேலும் ஒருபடி சென்று பல்கலைக்கழகத்தை மூடி, தமிழ் மாணவர்களின் உயர்கல்வியிலும் சிங்கள அரசு கைவைத்துள்ளது.

**— எல்லாளன் —**

படையினரால் கைப்பற்றப்பட்ட குடா நாட்டில் நிலைமை வழமைக்குத்திரும்பி தமிழ்மக்கள் இயல்பு வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கிறனர் என உலக சமூகத்திற்குக் காட்டுவதற்காக யாழ் பல்கலைக்கழகத்தை இயங்க சிங்கள அரசு அனுமதித்திருந்தது. ஆனால், சிங்கள இராணுவத்தின் அராஜக ஆட்சிக்கு எதிராக மாணவர்கள் போர்க்கொடி தூக்கிய போது பல்கலைக்கழகத்தை மூடி தமிழரின் உயர்கல்விக்கு ஆப்பு வைத்துள்ளது.

கடந்த சில வருடங்களாக யாழ் கல்விச்சமூகம் சிங்கள அரசினதும்-இராணுவத்தினதும் அடாவடித்தனங்களை அம்பலப்படுத்தும் நோக்குடன் கல்விசுற்றலுடன் அடக்கு முறைக்கெதிரான அரசியற்செயற்பாடுகளிலும் தீவிரமாகப்பங்கு கொள்ளத் தொடங்கினர். இது சிங்கள அரசாங்கத்திற்கு சீற்றத்தை உண்டு பண்ணியது. புலிகளை வேட்டையாடுவது எனக் கூறிக்கொண்டு பல்கலைக்கழகங்களுக்குள் அத்துமீறிப்புகுந்து தேடுதல்களை நடாத்தியும், மாணவர்களை கைதுசெய்தும் அவர்களை மிரட்டி வந்தது. தற்போது கைது செய்யப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவன் மீதும் புலிச்சாயம் பூசப்பட்டுள்ளது. புலிகளின் பிஸ்டல் குழுவின் உறுப்பினர் அவர் என இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது. உரப்பையினுள் ஆயுதம் கொண்டு திரிந்தார் என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. பிரசுர இயந்திரங்களை வீட்டில் வைத்திருந்து புலிகளின் அரசியல் பிரச்சாரகர்த்தாவாக செயற்பட்டார் என்றும் இராணுவம் கூறியுள்ளது. இவ்விதம் புலிச்சாயம் பூசப்பட்ட அந்த மாணவனை கொடிய பயங்கரவாததடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதாக, கைதை இராணுவம் நியாயப்படுத்த முனைந்துள்ளது.

அரச படைகளின் அடக்குமுறைகளை எதிர்த்து பொங்குதமிழ் இரண்டாவது நிகழ்வை விரைவில் ஆரம்பிக்கப் போவதாக பல்கலைக்கழக மாணவர்கள் அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

இந்த எழுச்சி நிகழ்வை தடுக்கும் நோக்குடன இந்தக் கைதையும் மற்றும் பல்கலைக்கழகங்கள் மீதான அத்துமீறல்களையும் சிங்கள இராணுவம் செய்துள்ளது.

(11ம் பக்கம் பார்க்க)

---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ரப்புவில் தரையிறங்கி இரகசிய நகர்வு மூலம் இத்தாவில்ப் பகுதியை ஊடுருவி புலிகள் ஏற்படுத்திய இராணுவ முன்னேற்றங்களை முறியடித்து. இராணுவ வலயத்தினுள்ளே புலிகள் அமைத்த போர்க்குகையைத் தக்கவைத்து வெற்றியீட்டிய புலியணிகளில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி ஆற்றிய பங்கு காத்திரமானது.

மரபுப்போர் அணியாக, எதிரியின் பெருமெடுப்பிலான இராணுவ ஆக்கிரமிப்பு நகர்வுகளை தடுத்து நிறுத்தி, வெற்றிகொண்டது முதல், போராட்டத்திற்கான முதலாவது மரபுசார் ஆயுதங்களை எதிரியிடமிருந்து கைப்பற்றியது, ஆனையிறவு - பரந்தன் கூட்டுப் படைத்தளத்தினுள் ஊடுருவி, எதிரி வன்னி மீதான தன் அடுத்தகட்ட இராணுவ நகர்விற்கு ஏறபாடு செய்திருந்த 'நடவடிக்கை இயங்கு தளத்தை' தாக்கியழித்து பதினான்றிற்கும் மேற்பட்ட ஆட்லெறிகளையும் அழித்து ஒரு மரபுப படையணியாக, தனித்துவமான தமது போராற்றலினால் சாள்ஸ் அன்ரனி படையணியின் போராளிகள் செய்த அற்புதமான சாதனைப் பட்டியல் தொடர்கின்றது'

இதேவேளை, தலைவர் அவர்களின் நேரடிக் கட்டளையின்படி திருமலை, யாழ்ப்பாணம் போன்ற இராணுவ ஆக்கிரமிப்பு பிரதேசங்களில் படையணி செயற்பட்ட களங்கள் போராட்ட வரலாற்றில் மிகவும் முக்கியத்துவமானவை. திருமலையின் காட்டுப் பகுதிகளை ஆக்கிரமித்து, அதன் மூலம் மொத்தமான திருமலை மண்ணையே ஆக்கிரமித்துவிட வந்த எதிரிகளின் 'ஒப்பரேசன் ராமசக்தி - 03'' நடவடிக்கையைத் தனித்துநின்று முறியடித்து சாள்ஸ் அன்ரனி படையணி திருமலை மண்ணிலும் காத்திரமான தன் வெற்றித்தடத்தை பதித்தது குறிப்பிடத்தக்கது.

' காலத்தின் தேவையை மிகச் சரியாக மதிப்பீடு செய்து ஒப்பற்ற ஒரு வீரனின் பெயரில் உருவாக்கப்பட்ட இப்படையணி போர்க்களங்களில் சாதித்தவை ஏராளம். வட முனைப் போர்க்களங்களில் மட்டுமல்ல தென்முனையின் திருமலைப் பகுதியிலும் களமாடிய வரலாறு அதற்கு மேலும் சிறப்பு சேர்ப்பதாய் அமைகிறது'' எனப் படையணியின் போரியல் சாதனைகளை எண்ணி வாழ்த்துக் கூறுகின்றார் மூத்த தளபதி கேணல் கருணா.

''வீரத்தை மூலதனமாகக் கொண்டு இந்தப் படையணி தமிழீழப் போரரங்குகளில் பல முக்கிய சமர்களில் காத்திரமான பங்கெடுப்பைச் செய்துவருகின்றது. அடைந்த எல்லாவெற்றிகளின் பின்னாலும் இந்தப் படையணியின் போராளிகளதும், தளபதிகளினதும் அசாத்திய வீரமும், தியாகமும், உயர் அர்ப்பணிப்பும் நிரமபியிருக்கின்றது. வீரச்சாவடைந்து விட்ட ஆயிரம் வரையிலான போராளிகளினதும், தளபதிகளினதும் முன்னுதாரணங்களே இன்றுவரையான இந்தப் படையணியின் வெற்றிகளுககும் செயல்வேகத்திற்கும் காரணம என்றால் அது மறுக்க முடியாது'' எனக் கூறுகிறார் படையணியின் சிறப்புத் தளபதியாக இருந்து இன்று விடுதலைப் புலிகளினுடைய கட்டளைத் தளபதிகளில் ஒருவராக உயர்ந்து நிற்கும் கேணல் - தீபன் அவர்கள்.

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் முதலாவது சிறப்புத் தளபதியாக தலைவரால் நியமிக்கப்பட்டவரும், இன்று விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டளைத் தளபதிகளில் ஒருவராக இருப்பவருமான மூத்த தளபதி கேணல் பாலராஜ் அவர்கள் கூறும்போது,

''இன்றுவரை இந்தப் படைப் பிரிவினுடைய தளபதிகள், அணித் தலைவர்கள், போராளிகள் எவ்வாறு யுத்த களங்களில் தலைவருடைய திட்டங்களுக்கு செயல்வடிவம் கொடுத்து உறுதியான, போராற்றல் மிக்க, தற்றுணிவு நிரம்பிய வீரர்களாக செயற்பட்டார்களோ, அவர்களுடைய வழிகாட்டல்களை, அவர்கள் விட்டுச்சென்ற வழித்தடங்களைப் பின்பற்றி, இந்தப் படையணி இதுவரை தமிழீழப் போரரங்கில் சாதித்தவற்றைப்பால் இரண்டு மடங்கு சாதிக்க வேண்டும்'' என கூறிப் போராளிகளை உறசாகப் படுத்துகின்றார்,

இன்று தமிழீழ சமரரங்குகளில் ஒரு முன்னோடியான மரபுப்படையணியாக, சமர்களின் வெற்றிகளுக்கான திறவு கோலாக செயற்படும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி தன் உருவாக்கத்தின் மூலம் எம் போராட்ட வடிவத்தில் புதியதொரு பரிமாண வளர்ச்சியைத் தந்தது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும.

கெரில்லாப்போர் வடிவத்திலிருந்து மரபு இராணுவமாக மாறிய எம போராட்ட பரிணாமத்தின் மூலவேராக இருந்தது சமரரங்குகளில் எதிரிகள் ஏறபடுத்திய எத்தனையோ சவால்களையும், நெருக்கடிகளையும தனக்கே தனித்துவமான நெஞ்சுறுதியுடன் எதிர்கொண்டு சாதனைகளுக்காய் சரித்திரமாகிவிட்ட வீரர்களின் தியாகத்தாலும், உயர்ந்த செயல்திறனாலும், அர்ப்பணிப்பு நிரம்பிய வீரத்தாலும் முதன்மையானதொரு படைப்பிரிவாக சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி தேசியத் தலைவர் அவர்களின் வழிகாட்டலில் இன்று உயர்ந்து நிறகிறது.

''எங்களுக்கு ஏற்பட்ட பெரிய இராணுவ எதிர்ப்புக்களை எலலாம் இந்த விசேட படைப்பிரிவைபயிற்றுவித்ததன் மூலம் எங்களால் தடுத்து நிறுத்த முடிந்தது.

''பெரியளவிலான தாக்குதல் நடந்த சந்தர்ப்பங்களிலும், மற்றும் எமது வலிந்த தாக்குதல்களிலும் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவை ஈடுபடுத்தி நாங்கள் பெரிய வெற்றிகளை எடுத்தோம். உங்களுடைய காலத்திலும் நீங்கள் பெரும் இராணுவ வெற்றிகளை ஈட்டுபவர்களாகத் திகழவேண்டும்'' என 1994ம் ஆண்டு படையணிப் போராளிகளின் மத்தியில் படையணியின் சாதனைகளைச் சொல்லி வாழ்த்துக்கூறிய தலைவர் அவர்கள், இன்று தனது பத்துவருடப் போர்வாழ்வைக் கடந்து சாதனைக்களங்கள் நோக்கி வெற்றி நடைபோடும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியை அதன் பத்தாவது ஆண்டு நிறைவில் வாழ்த்தி அதன் பத்தாண்டு பதிவுகளை சொல்லும் ''நெருப்பாற்று நீச்சலில் பத்தாண்டுகள்'' எனும் நூலிற்கு வழங்கிய ஆசிச்செய்தியிலிருந்து

''எமது விடுதலை இயக்கத்திற்கும் எமது இயக்கத்தால் முன்னெடுக்கப்படும் எமது தேச விடுதலைப் போராட்டத்திற்கும் ஒரு மகத்துவமான வீர வரலாறு உண்டு. அந்த வீரவரலாற்றை நாமே படைக்கிறோம் நாமே எமது வீரவரலாற்றின் கதாநாயகர்கள்''

''பத்து ஆண்டுகளுக்கு சாள்ஸ் அன்ரனி சிறு விதையாக முளைத்து பெரு விருட்சமாக எழுந்து நிற்கிறது. இந்த வளர்ச்சிக்கு இப் படையணியிலிருந்து விடுதலைக்கு வித்தான வீரத்தளபதிகளதும் போராளிகளதும் அர்ப்பணிப்புக்கள்தான் ஆதாரமானவை. இந்த விடுதலை வீரர்களது கனவுகளோடு, வெற்றிகளைக் குவித்துச் செல்லும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி தனது விடுதலைப் பாதையில் தொடர்ந்தும் முன்னேறிச் செல்ல எனது வாழ்த்துக்கள்'' □



www.eelamview.com

www.eelamview.com



(11ம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதிகார...

புலிகள் இயக்கம் முன்னெடுத்துள்ள அமைதி முயற்சிகளுக்கு ஒத்துழைக்க மறுத்து - போரை தொடர்ந்து நடாத்திக்கொண்டிருக்கும் சந்திரிகா அரசாங்கம் சர்வதேச அளவில் கறைபட்டுப்போயுள்ளது இந்த நேரத்தில், பொங்கு தமிழ் என்ற பெயரில் மீண்டுமொரு மக்கள் எழுச்சி நடந்தால் கறைபட்டுப்போயுள்ள தனது அரசுக்கு மேலும் இழுக்கு ஏற்படும் என சந்திரிகா அம்மையார் அஞ்சுகின்றார்.

எனவேதான் பல்கலைக்கழகங்களுக்குள் புலிகள் ஊடுருவி விட்டனர் என்று பொய்ப் பிரசாரம் செய்து, புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதுபோல உலகிற்கு காட்டி, மக்கள எழுச்சியை நசுக்க சிங்கள இராணுவம முயல்கிறது.

அடக்குமுறை அரசுகளுக்கு எதிரான மாணவர் போராட்டங்களின் விளைவுகள் எப்படி அமையும் என்பதற்கு பல்வேறு உலகச் சான்றுகள் உண்டு. மாணவர் போராட்டங்களால் அரசுகள் கறைபட்டு, கவிழ்நத வரலாறுகள் சிங்கள அரசையும் அச்சமூட்டிக் கொண்டிருக்கின்றன.

ஏற்கனவே திரிசங்கு சொர்க்க நிலையில் தள்ளாடிக் கொண்டிருக்கும் கொழும்பு அரசாஙகத்தை தமிழ் மாணவர்களின் அரசியல் போராட்டங்கள் மேலும சிக்கலான நிலைக்குள் தள்ளிவிடும் என்று அது கருதுகின்றது.

தமிழ் மாணவர்களுக்கு எதிராக இராணுவத்தை ஏவி விடுவதன் மூலம உருவாகவிருக்கும் எழுச்சி உணர்வை நசுக்குவதுடன், அதை வைத்து, சிங்கள மக்கள் மத்தியில் இனவாத உணர்ச்சியைக் கிளறி அதன் மூலம் எதிர்க்கட்சியினரை வாயடைக்க வைத்து தனது அதிகாரத்தைப் பாதுகாக்க சநதிரிகா அரசாங்கம் முயல்கின்றது.

தமிழ் - முஸ்லிம் மக்களாகி, அவர்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளாகத்தான் சிங்கள அரசு ஆட்டங்காணுகின்றது. ஆட்சியில் உறுதித்தன்மை இல்லாது போகின்றது என்று பரப்புரை செய்வதில் சிங்களப் பேரினவாதிகள் மும்முரமாய் உள்ளனர்.

இத்தகைய இனவாதக் கருத்துக்களைப் பரப்பியவாறு நாடாளுமன்றையும் செயற்படவிடாது இடைநிறுத்தி, அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றச் சம்மதம் கோரி சர்வசன வாக்கெடுப்பையும் நடத்தப்போவதாக சந்திரிகா அம்மையார் கூறியுள்ளார்.

தற்போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையால் தமிழ் முஸ்லிம் கட்சிகள் குறிப்பிடும் படியான ஆசனங்களைக் கைப்பற்றி விடுவதுடன், சிங்களக் கட்சிகள் அறுதிப் பெரும்பான்மை பெறமுடியாத அந்தர நிலையும் உருவாகுகின்றது. அத்துடன் சிறுபான்மைக் கட்சிகளின் பேரம் பேசல் பலத்திற்கும் இந்த தேர்தல்முறை வாய்ப்பளித்துவிடுகின்றது என சிங்களப் பேரினவாதிகள் குற்றம சாட்டுகின்றனர்.

இதனால் தேர்தல் முறையை மாற்றி சிங்கள இனத்தின் அதிகாரத்தை ஆட்சிபீடத்தில் உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப் போவதாக சிங்கள மக்கள் நம்ப வைக்கப்படுகின்றனர்.

முன்னர் இருந்த தேர்தல்முறையை தமிழர்களுக்கு ஆதரவாக உள்ளது என்று கூறியே தற்போதைய விகிதாசார முறைக்கு ஜே. ஆரின் அரசாங்கம் மாற்றியமைத்திருந்தது.

1977 இல் சிங்கள நாடாளுமன்றின் எதிர்க்கட்சி என்ற நிலையை தமிழர் விடுதலைக் கூட்டணி பெற்றது. மீண்டும் இவ்வாறானதொரு 'அரசியல் அந்தஸ்த்து' தமிழர்க்கு ஏற்பட வாய்ப்பளிக்கப் படக்கூடாது என்ற இனவாத எண்ணத்துடனேயே விகிதாசார பிரதிநிதித்துவ முறையை ஜே. ஆரின் அரசாங்கம் நடைமுறைப் படுத்தியது.



ஆனால் இப்போதோ விகிதாசார முறையில் தமிழ் முஸ்லிம் கட்சிகளின் ஆதிக்கம் அதிகரித்து விட்டது என்று காரணம்காட்டி மீணடும தேர்தல் முறையைமாற்றி அமைக்க சந்திரிகா அரசாங்கம் முடிவெடுத்துள்ளது.

இந்த அப்பட்டமான இனவாத உணர்வை உலகிற்கு மறைக்கும் எண்ணத்துடன் அரசியலமைப்பு மாற்றத்திற்கு சந்திரிகா அம்மையார் வேறு காரணங்களைக் காட்டமுயல்கிறார். உறுதியான ஆட்சிக்கும, இனப்பிரச்சனை தீர்வதற்கான அரசியல் தடையை அகற்றும் எண்ணத்துடனேயே அரசியல் அமைப்புச்சட்டத்தை திருத்தப் போவதாக அம்மையார் பரப்புரை செய்கிறார்.

கடந்த எட்டு மாதகாலமாக புலிகள் இயக்கம் தீவிரப் படுத்தியுள்ள அரசியல் செயற்பாடுகள் காரணமாக சந்திரிகா அரசாங்கம் என்பது ஒரு போர்வெறிபிடித்த அரசு என்றும் - தமிழினத்திற்காக பகைமைகாட்டும் இனவாத அரசு என்றும் சர்வதேச சமூகத்தில் கருத்தாக்கம் ஒன்று வலுவாக ஏற்பட்டு வருகின்றது. இப்போது, தனது அதிகாரத்தை உறுதிப்படுத்தும் நோக்குடன் தனக்குவாய்ப்பில்லாத நடாளுமன்றை செயற்படாமல் முடக்கிவிட்டு, தன்னிச்சைப்படி செயற்படமுனையும் சர்வதிகாரியாக சந்திரிகா அம்மையார் உலக சமூகத்தின் முன்னால் காட்சியளிக்கின்றார்.

சந்திரிகா அம்மையார் பூண்டுள்ள சமாதானத் தேவதை வேடமும் - ஜனாதிபதி என்ற முகமூடியும் சர்வதேச அளவில் அம்பலப் பட்டுவருகின்றது. அதேவேளை தமிழ்மக்களது அரசியல் போராட்டத்தின் நியாயப்பாடுகளும்-புலிகள் இயக்கத்தினது மக்கள் பலமும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப் பட்ட ஒன்றாக விரைவாக மாறி வருகின்றது.

△

(04ம் பக்கத் தொடர்ச்சி)

## தீதும் நன்றும்...

பிறக்கும் கருத்தோட்டம் பெரும் தவறாகவே போய் முடியும்.
இப்போது நாங்கள் பல்லாயிரம் சிறிய வெற்றிகளை ஒரு மாபெரும் வெற்றியாக்கும் வலுச்சமநிலையை மாற்றி எமக்கு சாதகமாக்கி மாற்றிவிடும், பலவீனத்தை பாரிய பலமாக்கிவிடும் பணியில் ஈடுபட்டு இறுதி வெற்றியை நோக்கி நகர்கின்றோம். இக்கட்டத்தில் வெற்றி நிச்சயமான நிலையிலே நாம் தாக்குதலில் ஈடுபடுவோம். தேவையற்ற அழிவுகளை தரும் வகையில் தாக்குதலில் ஈடுபடோம்''.

கியாப்பின் கூற்றோடு எமது நிலையையும் ஒப்பிடுங்கள். இறுதி வெற்றியை எவ்வாறு அடைந்தீர்கள் என கியாப்பை வினவியபோது அவர் கூறியதை மனதிலிருத்துங்கள். ''நாம் அனைத்து மக்களின் தேசப்பற்றையே சார்ந்து நின்றோம்'' நாடு முழுவதும் தம் ஆற்றலை வெளிக் கொணர வாய்ப்பளித்தோம். பின்வரும் இராணுவச் சிந்தனையை நம்பினோம். நிரந்தரப் படையையும் மக்களின் ஆயுதப் படைகளையும் மையப்படையாகக் கொண்டு வென்றோம்''
மக்கள் மட்டுமே எந்தச் சக்தியையும் உடைத்தெறியும் வல்லமை உள்ளவர்கள் என்பதை நீங்கள் முழுமையாக உணரும்போது எல்லா கேள்விகட்கும் விடை மட்டுமல்ல சகல ஒடுக்குமுறைகளிலிருந்தும் விடிவும் கிட்டிவிடும்.

(09ம் பக்கத் தொடர்ச்சி)

## வழித்தடம்

வெடித்து சிதறிய
எறிகணைகளின் ஊடாக
புலிக்குட்டி அந்த இளம்
வீரன் தொடர்ந்தும்
முன்னேறினான்.

இடைவிடாது
அவனுக்குக்கிடைத்த பின்
வாங்கும் கட்டளையையும் கடந்து
அவனில் ஆவேசமான
முன்னேற்றம் இருந்தது. தனது
நிலத்தை ஆக்கிரமிப்பவனின்
மீதான ஆத்திரம், எப்படியாவது
எதிரியை முறியடித்துவிட
வேண்டும் எனும் உத்வேகம்
அவனை அந்தக்களத்தில் வேகமாக
இயக்கின. காட்டிற்கு
உணர்விருந்தால் அவனின்
துணிச்சலை நேரில் கண்டு
சிலிர்த்துப்போயிருக்கும்,

சண்டையின் அந்தப்
பொழுதுகள், சாதாரணமானவர்
களால் புரியப்பட முடியாதவை.
வர்ணனைக்கு அப்பாற்பட்டவை.
தனியொருவனாக, எதிரியின்
மூர்க்கமான எதிர்ப்புக்களின்
மத்தியில் இடைவிடாத எறிகணை
வீச்சுக்களின் மத்தியில்
முன்னேறுவது போர்க்களத்தில்
எல்லோராலும் சாதித்துவிடக்
கூடியதல்ல.

இறுதியில் எதிரியின் அதே
நிலைகளை வீழ்த்துவதற்கு
இன்னமும் ஐந்து மீற்றர்
தூரமே உள்ள நிலையில் அவன்
வீழ்ந்து போனான். பெருமைக்குரிய
அந்த வீரன் திரும்பிவரவில்லை.

அவன் உயிருடன்
இருந்திருந்தால் நிச்சயம்
கட்டளையை மீறித் தனித்து
முன்னேறிச் சென்றதற்கு
தண்டனை கூட பெற்றிருப்பான்.
ஆனால் இன்று விசாரணைக்கு
உட்படுத்த முடியாத அவனது
வீரத்தை மெச்சி, பெருமை
கொண்டார் அவனது தளபதி.
உறுதியுடன் அவனது நாவுகள்
இறுதியாகத் தன் தோழனுக்கு
சொல்லிவிட்டுச்சென்ற
வார்த்தைகள்
மீண்டும் எம் காதுகளில் மோதி
ஒலிக்கின்றது.

''பிரச்சனையில்லையடா, நான்
தனியப்போறன்''



www.eelamview.com

www.eelamview.com



# சிரம் தாழ்த்தா வாழ்வே எமக்கான சிம்மாசனம்


ஈழத்தமிழினமே! முதலில் அழுவதை நிறுத்து
உனக்கானது ஒப்பாரியல்ல.
பாலைவனத்தில பாலூறாவிடினும்
பாதையிடையில் சோலைவருமென நம்பு.
இழவு காத்தலை உன் அகராதியிலிருந்து எடுத்தெறி.
கண்ணீரை விரல்நுனியிலெடுத்துச் சுண்டிவிடு
வாழ்விடிந்து போனதென வாசலிற் கட்டிய
சோக தோரணங்களை அறுத்து விழுத்து.
மூதூரசு நிமிர்ந்திருந்த தலைகவிழ்ந்து
நிலம்பார்த்து உலவுவதை நிறுத்திவிடு.
என்ன நடந்ததெனத் துன்பப்பூ சூடியுள்ளாய்;
விண்ணிடிந்தபோதும் தாங்கும் வீரியனே!
சின்னப் புண்ணின் வலிக்காகவா
சிரிப்பிழந்து போனாய்?
ஒரு சிறகுதிர்ந்து போனதுக்காக
ராஜபறவைகள் சோககீதம் பாடுமோ?
கோட்டை மதில்களைக் குண்டுசியா துளையிடும்?
எத்தனை துயர்வரினும் எதிர்கொள்ளப்பழகு;
உள்ளெரியும் கோபநதி கிளறி
ஒரு பொறியெடுத்து வாசலை ஒளிசெய்வாய்.
புயலின் வலியனே! உன்னையெவனடா
பூட்டியடைக்க முடியும்?
பாவியரால் ஜீவிதம் கொஞ்சம்
பழுதானதென்னவோ உண்மைதான்
அதற்காகக் கேவியழுவதால்
ஒன்றும் கிடைக்கப்போவதில்லை.
கோடையில் இலையுதிர்த்து குற்றுயிராகும் மரங்கள்
வைகாசி வந்ததும் பூப்படைந்து புன்னகைக்கவில்லையா?
மரங்களிலிருந்து உன்மனதுக்கு வைரம் பாயட்டும்.
இந்த மண்ணின் முந்தை வழித்தோன்றல்கள் நாம்.
சிங்களத்தின் வருகைக்கு முன்னரே
சிரசில் முடிதரித்த வம்சமெமது.
தாமிரபரணிக் கரையில் தழைத்திருந்த வேரே!
கதம்பநதி தீரத்தில் காற்றளைந்த தேரே!
எல்லாமும் இழந்து போனாயெனினும்
மீண்டும் தொடங்கும் மிடுக்குளாய் நீ
பூண்டும்; புல்லுமல்ல நீ பொசுங்கிப் போவதற்கு.

காலமெமக்குக் கைக்கணக்கில் வீசிய தலைவனல்ல.
இவனே காலத்தைப்படைப்பானெனச்
சொல்லியனுப்பிய பிள்ளை.
தளராத உறுதிக்குச் சான்றென்றிருக்கட்டுமென
இரண்டு நூற்றாண்டுகளுக்குமான நியமனம்.
இது வெறும் புகழ்பாடும விருத்தமல்ல.
காலக்குரலறிந்த வியாசனின் கணிப்பு.
உலகத்தமிழினமே!
உனக்கான வாழ்வின் வசந்தம்
பிரபாகரனென்ற பெயரில்தான் உலவுகின்றது.
கண்டுகொண்டாயானால் காரியம் சித்திக்கும்.
தவறவிடுவாயானால் தத்தளிப்பாய்.
நீ வீட்டிற் சும்மா நீட்டிப்படுத்திருக்க
விடுதலையுந்தன் கட்டிலருகே வந்து
கண் திறக்கமாட்டாது.
போரடிப் பெறுவதுக்குத்தான்
விடுதலையென்ற பெயர்.
பாராளுமன்றில தருவது பாதியுண்ட மீதிச்சோறு;
அதைவாங்கித் தின்னவா ஆசைப்படுகிறாய்?
அட; எச்சிலுண்ட வம்சமல்லடா எமது.
எத்தனை உதரக்கொடிகளைப்
புதைத்துவிட்டெழுந்தோம்.
வெறும் புல்முளைக்கவா விதைத்தோம்?
வாழ்வின் அனைத்தையும் போருக்களித்து
வதையுண்ட பின்னும்
தாழ்வின் படுக்கையிலா தலை சாய்க்க விரும்புவாய்?



உலைக்களம்

— வியாசன் —



வெளியே வா சிறுத்தையே!
உன் மூச்சின் வீச்சில்
முனையிருந்த
வாழ்வு முளைக்கட்டும்;
அகதிக்குடியிருப்பும்,
நிவாரண வரிசையும்,
குண்டும் குழியுமான செம்புழுதித்தெருவும்
இயல்பிலிருந்து உன்னை இல்லாமற் செய்யுமா?
உலையேறா அடுப்புகளின் அவலக்குரலில்
நீ வேரிழந்து விழுந்து விடுவாயா?
ஊர்போகும் ஏக்கத்தில் உருகி
எலும்புருக்கி நோயெனை இடிந்து போவாயா?
அட; பஞ்சபூதங்களனைத்திலும் பலவானே!
தமிழரெனும் சூரியக்குடும்பத்தின் தோன்றலே!
கவலைக்கு மூச்சை கட்டிக் காற்றிலேற்றடா
நம்பிக்கை நூலில் விண்கூவட்டும் பட்டம்.
பேச்சு வார்த்தை மேசையிற் கசியும் சலுகை நீரில்
நாக்கு நனைக்கலாமென நம்பாதே.
பூதகிகள் இப்படித்தான் பால் கொடுக்க வருவார்கள்.
ஒப்பனைக்குக் குடிப்பது போல் இருக்கலாமே தவிர
அற்புதமான ஆகாரமென அருந்தி விடாதே.
வியானமேறி வரும் வெள்ளை மரங்களின் நிழலில்
சுகமான தூக்கம் வருமெனும் கனவில மிதக்காதே.
நம்பிக்கையில்லாத் தீர்மானம் வாக்கெடுக்கும் போதில்
வென்றாலும், தோற்றாலும் உன் விதியழியமாட்டாது.
போராட்டமே உனக்கு வாழ்வெழுதி வழிகாட்டும்,
போராட்டமே உனக்கு
இழந்தவையை மீட்டு முடிதரிக்கும்.
ஆனையிறவுக் கதவுகளின் அகலத்திறப்பு
எமக்கு வாழ்வுவசமாகுமென்பதற்கான அடையாளம்.
கனவின் மீதியையாவது கவனமாகப் பொத்திவை.
அதிலிருந்து தான் உனக்கான அழகு
துளிர்க்கப்போகிறது;
பிரபாகரன்

திசையாவும் எம்வசமாகும் காலமிது.
பூமிப்பரப்பெங்குமிருந்து எமக்குப் புதுரத்தம் பாய்கிறது.
சோர்வுனக்கு ஆகாது இப்போது;
நிலவு தூறும் ஒளிமழையிறங்கி
எம் பூமி சௌந்தர்யம் பூசிக்கிடக்கிறது:
எழில் சிலிர்த்திருக்கிறது எம் வயல்கள்
வாய்க்காலில் பொன்னுருகிப் பாய்கிறது
இரவுப்பறவைகளின் சிறகசைப்பில்
தாளம் பிசகாத சங்கீதம் வருகிறது.
கள்ளியும், நாகதாளியும, ஆமணக்குமென்றாயினும்
இவையாவும் காதற்கொடிகள்
வீட்டுக்கோடியில் நிற்பது வெறும் வீரைமரமல்ல
எம் வீரமரம்
எங்கள் பரம்பரையின் மூசசுப்பட்டுயர்ந்தது
இந்த முதிரை மரம்
இவற்றை இழந்திருக்க எப்படி ஒப்புவாய்?
பகையிடம் கொடுத்தபின் எப்படிப் படுத்திருப்பாய்?
போரில் உயிர்கொடுத்துப் போகலாமெனினும்
விடுதலையின் வேரையிழத்தல் கூடாது;
மானமே மானுடத்தின் மகுடம்
சிரம்தாழ்த்தா வாழ்வே எமக்கான சிம்மாசனம்
பேச்சும் வார்த்தைகளும, ஒருபுறம் புன்னகைக்கட்டும்
நீ போருக்கான புரவிகளுக்குக் கடிவாளம் பூட்டு
தேரின் சக்கரங்களுக்கு எண்ணை பூசு
வேல் முனைகளைக் கூர்மையாக விளங்கச் செய்;
முரசு கொட்டுவோரே! வார்பிடித்துச் சுருதிசேருங்கள்.
பரணியொன்றெழுதப் புலவோரே தயாராகுங்கள.
பீரங்கி வாய்கள் பூச்சூடுவதற்கல்ல...
யாரங்கே நிற்பது?
இழுத்து வாருங்கள் பீரங்கிகளை;
மேசையிலிருந்து சமாதானம் வருமெனில் சந்தோஷம்
யாரேனும் ஏமாற்ற நினைப்பார்களானால்
அது யாராக இருந்தாலும்
இங்கே பாடம் படித்துத் திரும்புவர்;
இந்தச் சத்தியத்தின் குரல வெறும் சங்கீதமல்ல.
தமிழீழத்துக்கான தண்டோரா. □

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.eelamview.com